
# பெண்ணின் குரல்

ஜூன் 2002 இதழ் 25 ISSN 1391- 0914 விலை 20/=

பெண்களின் உரிமைக்கான இலங்கைச் சஞ்சிகை



## பெண்களும் அரசியலும்

# பொருளடக்கம்


- பெண்களும் அரசியலும் 2
- இலங்கையில் சமூக ஜனநாயக சீர்திருத்த இயக்கங்களில் முன்னோடிகளான சில தமிழ்ப் பெண்கள் 5
- அரசியலில் பெண்கள் 11
- அரசியலில் இஸ்லாமியப் பெண்களின் பிரவேசம் 12
- இலங்கை அரசியலில் முஸ்லிம் பெண்கள் 14
- நேர்காணல் ரெங்கநாயகி பத்மநாதன் 16
- பாராளுமன்றத்தில் பெண்கள் 22
- அட்டைகள் (சிறுகதை) 28
- ஒரு கணவனின் கண்ணோட்டத்தில் (கவிதை) 31



*ஆசிரியர்*

பத்மா சோமகாந்தன்

*முகப்புச் சித்திரம்*

ஜானகி சமந்தி

*அச்சுப்பதிவு*

ஹைரெக் பிறின்ற்ஸ்

*ஆதரவளிப்பு :* SIDA

ஜூன் 2002

ISSN 1391 - 0914




கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்



**வெளியீடு :**

பெண்ணின் குரல்
21/25, பொல்ஹேன்கொட கார்டின்ஸ்,
கொழும்பு - 05.
தொலைபேசி : 074 - 407879 / 816585
ஈ-மெயில் : voicewom@sltnet.lk


## பெண்களும் அரசியலும்



*"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்*
*எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்*
*இளைப்பில்லைக் காண்."*

என ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே மகாகவி பாரதியார் பெண்களின் சமஉரிமை களுக்காக ஓங்கிக் குரல் எழுப்பி சமுதாய நீதி நிலைநாட்டப்பட வேண்டுமென வலியுறுத்தினார். பெண்கள் கல்வியறிவுள்ளவர் களாக மட்டுமன்றி உயர் கல்வி கற்றுப் பட்டங்கள் பெற்று நாட்டு நிர்வாகப் பொறுப்புகள் தொழிற்றுறை களிலீடுபட வேண்டும்; தேசத்தின் சட்டவாக்கஞ் செய்யும் உயர் சபையாகிய சட்ட சபைகளுக்கும் சென்று தீர்மானங்கள் எடுப்பதில் தமது பங்களிப்பை ஆற்ற வேண்டுமென அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தினான் அப்பெருங் கவிஞன்.

மகான்கள், பெரியார்கள் கண்ட கனவுகள் எதிர்பார்ப்புகள், தீர்க்கதரிசனங்கள் பொய்த்து விடுவதில்லை. படிப்படியாக நிறைவேறுவதை எவராலும் தடுத்துவிட முடியாது.

இன்று கணிசமான எண்ணிக்கையான பெண்கள் படிப்பறிவுள்ளவர்களாக, பட்ட தாரிகளாக, தொழில் நுட்பவிய லாளர்களாக, பொறியியல் நிபுணர்களாகப் பல்துறைகளிலும் கால் பதித்து வருகின்றமை கண்கூடு.

நமது நாட்டில் மட்டுமல்ல, வேறு பல நாடுகளிலும் அரசியல் ஆண்களுக்கான துறையெனப் பல காலமாக நம்பப்பட்டது. பணபலம், செல்வாக்கு, வன்முறைகளை எதிர்த்துப் போராடும் துணிவு முதலியவை தேவையென்பதால் அத்துறையில் பெண்கள் ஈடுபடுவது எளிதான விஷயமல்ல. அதனாலேயே ஏழுதசாப்தங்களுக்கு முன்னரே எமது நாட்டில் சர்வஜன வாக்குரிமை நடைமுறைக்கு வந்த போதிலும் கூட, மிகச்சமீப காலத்திலிருந்தே கஞ்சிக்குப் பயறு இடுவதுபோல அவ்வப்போது சில பெண்கள் அரசியலில் ஈடுபட்டுப் பணிபுரிந்தனர்.

'பெண்களும் அரசியலும்' எனும் தொனிப் பொருளில் வெளியாகும் 'பெண்ணின் குரல்' இவ்விதழ் நமது நாட்டில் பெண்களின் அரசியல் பங்களிப்பு பற்றிய பல விஷயங்களுடன் உங்கள் கரங்களில் தவழ்கின்றது. உங்கள் கருத்துக்களை எழுதுங்கள். அவை எமது பணிகளை மேலும் ஊக்குவிக்கும். வணக்கம்

- பத்மா சோமகாந்தன்

# பெண்களும் அரசியலும்

- கௌரி பழனியப்பன்

பண்டைக்காலத்தில் அரசிகள் ஆட்சி செய்த வரலாறுகள் வெகு அருமையாக உண்டெனினும், பரம்பரை பரம்பரையாகப் பெண்கள் அரசியலில் ஈடுபடுவதும் வெகு துல்லியமாகப் பிரகாசிப்ப தென்பதும் நடைபெற்றதாக நானறிந்தவரை இல்லை. வாரிசு உரிமையாக இருந்த நிலை தவிர பெண்களுடைய பங்காக அரசியல் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை. பெண்கள் வழமையான குழந்தைகளைப் பெறல், பராமரித்தல் குடும்பச் சுமைகளைத் தாங்குதல் என்ற நிலைதான் பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்தது.

ஆனாலும் சமீபகாலத்தில் அதாவது 30, 40 வருட காலத்தில் பெணகள் அரசியலில் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தலை காட்டியுள்ளனர். அதுவும் தாமே ஆர்வமுற்று அந்த நிலைக்குத் தம்மை ஈடுபடுத்தியதாக நாம் அதிகம் கருதமுடியாது. இலங்கையைப் பொறுத்தளவில் அநேகமாய் பெண்கள் திடீரெனத் தமது தகப்பன், சகோதரன், கணவன் என்போரின் மறைவால் ஏற்பட்ட வெற்று இடத்தை நிரப்புவதற்காகத் தள்ளப் பட்டே அரசியலில் புகுந்துள்ளனர். பிரதம அமைச்சர், அமைச்சர் பாராளுமன்ற அங்கத்தவர் என்போரின் திடீர் மறைவால் ஏற்பட்ட அனுதாப அலை அவர்களைச் சார்ந்த மனைவியோ, மகளோ, சகோதரியோ அவ்வெற்றிடத்தை நிரப்பும் வகையால் அரசியலில் பிரவேசம் செய்தனர். பெண் என்பதை விட குடும்பப் பின்னணியே வாய்ப்பாக அமைந்தது. அரசியல் பற்றிய அறிவோ, அனுபவமோ, ஆர்வமோ அற்ற வெறும் அனுதாப உணர்வினால் அரசியலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெண்கள், தாமாக ஒரு கொள்கையை வகுப்பதிலோ, ஏற்படுத்து வதிலோ தம்மை ஈடுபடுத்தியதாக இல்லை. அனுதாப அலைகளால் தள்ளப்பட்டு வந்து அரசியலில் குதித்த பெண்கள் தமது கட்சியோ, தம்மைச் சார்ந்தோரோ ஏற்படுத்தி வைத்த அதாவது ஆண்களுடைய சிந்தனை ஓட்டத்துள்ளேயே தம்மை உட்படுத்திக் கொண்டு செயல்பட்டனர். பல அமைச்சர் களையும் அரசியல்வாதிகளையும் அறிவிலு யர்ந்தோர்களையும் அணைத்துச் செல்லும் நாட்டின் ஜனாதிபதி, பிரதம மந்திரி போன்ற உயர்ந்த பதவிகளையும் வகுத்துத் தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

இவை பெண்களால் எந்த உயர் பதவிகளையும் வெற்றிகரமாக வகிக்க முடியும் என்பதற்கான எடுத்துக்காட்டுக்கள் எனலாம்.

நான் இதுவரை குறிப்பிட்டது உயர்மட்டநிலைப் பெண்கள் பற்றியது.

உயர்மட்ட நிலையைத் தவிர நடுத்தர வர்க்கத்தினரின் தொகையே அதிகமாயிருப்பினும் கூட இத்தொகுதியைச் சேர்ந்த பெண்கள் குடும்பப் பொறுப்புகள், பொருளாதாரச் சிக்கல்கள், சமூகக் கட்டுக் கோப்புகள் ஆகியவற்றுள் அமிழ்ந்து விடுகின்றனர். தமது கடமைகளை மீறி தனது சுய சிந்தனையை வளர்த்துக் கொள்ளவோ அரசியல் என்ற இந்தச் சூதாட்டத்தில் தன்னைச் சேர்த்துக் கொள்ளவோ கூடிய அவகாசம் அவர்களுக்குக் கிடையாது. இவர்களுடைய நடத்தை, சிந்தனை செயற்பாடுகள் யாவும் சுற்றிச் சுற்றி குடும்பத்தையே மையமாகக் கொண்டி ருப்பதால் அதனுடைய நன்மை தீமைகளு க்கே தம்மையாளாக்கி மாய்ந்து விடுகின்றனர்.

கீழ்மட்ட நிலையிலுள்ள பெண்களை எடுத்துக் கொண்டால், அன்றாட வாழ்க்கையில் பொருளாதாரமே அவர்களைப் பிய்த்து நொறுக்குகிறது. இதனால் பல்வேறு வகையான கஷ்டங்களுக்குத் தினமும் முகங்கொடுக்க வேண்டிய இக்கட்டான நிலை. எனினும் அரசியலில் தங்கள் பங்களிப்பாகக் கூட்டங்கள் ஒழுங்கு செய்தல். சில கட்சிகள், கொள்கைகளை ஆதரித்துப் பேசுதல், ஊர்வலம் ஒழுங்கு செய்தல், கோஷ மெழுப்புதல் போன்ற செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்தித் தம் அரசியல் உணர்வுகளை திறமையாக வெளிப்படுத்துகின்றனர். எனினும் வேலையின்மை, பணமின்மை, இருப்பிடம், வீடு வசதயீனங்களால் ஆர்வமிருப்பினும் அரசியல் பிரவேசம் கடினமாயிருக்கும். இவர்களுடைய அரசியல் அறிவு, திறமைகளை வெளிக்காண்பிக்கக் கூடிய வாய்ப்புக் களுமில்லை. அதனால் இந்நிலையிலுள்ள பெண்கள் அரசியலில் அக்கறை காண்பிப்பதும் இல்லை. 'பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்' என்பதற்கிணங்க அன்றாடங் காய்ச்சிகளான கீழ்மட்ட மக்கள், குடும்பச்சுமையால் அழுத்தமுற்றிருக்கும் பெண்கள் ஒழுங்காகத் தம் வாக்குச்சீட்டுகளைக் கூடப் பிரயோசனப் படுத்துவார்களோ என்று கூட நாம் எண்ண

வேண்டியிருக்கிறது. பணம், பொருள், பதவி இல்லாத இவர்களைுடைய வார்த்தைகளுக்கும் அதிகம் வரவேற்பு இருக்க மாட்டாது. குடும்பத்துள்ளேயே தலைமூழ்கிய பிரச்சினைகள் நிறைய இருப்பதால் இவர்கள் அரசியலைப் பற்றிய அக்கறையின்றியே வாழ்கின்றனர். தேர்தல் காலங்களில் கட்சிகளையோ வேட்பாளர்களையோ முற்று முழுதாக அறிந்திருக்க வேண்டுமென்ற அவா கூட ஏற்படுவதில்லை.

இத்தகைய நிலைமைகளை மாற்றியமைத்து பெண்கள் அரசியலில் அதிகம் பங்கு கொள்ளச் செய்யக்கூடிய வழிவகைகள் என்ன? இதற்காகத்தான் பல பெண்ணியவாத, பெண்கள் விழிப்புணர்வு அமைப்புக்கள் தோன்றியுள்ளன. அவை பெண்கள் கல்வி, அறிவு, பொருளாதாரம் எனப் பல துறைகளிலும் மேம்பாடடையச் செய்வதற்காகப் பல திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்தி வருகின்றன. பெண்களின் அறிவைத் தன்னம்பிக்கையை, துணிவை வளர்க்கப் பல பயிற்சிக் கருத்தரங்குகள், உரைகள், விவாதங்கள் செயல்திட்டங்களை நடத்துகின்றன. இவை சம்பந்தமாகப் பல சஞ்சிகைகள், நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் என்பவற்றை வெளியிடுகின்றன. பெண், நிவேதினி, பெண்ணின்குரல், பிரவாகினி முதலியவை பல வழிகாட்டல் செயல் பாடுகளை ஒழுங்கு செய்துள்ளன. இத்தகைய நிகழ்வுகளால் பெண்கள் தன்னம்பிக்கை, துணிவு, அறிவு என்பனவற்றைப் பெற்று விழிப்புணர்வு எய்தி தமக்கும் தம் குடும்பத்திற்கும் தாம் இணைந்துள்ள சமூகத்திற்கும் பலவழிகளில் தொண்டாற்றலாம். பல பழைய மூடக் கொள்கைகளிலிருந்து விடுபட்டு சிறந்த கருத்துக்களுக்குச் செயலுருக் கொடுக்கலாம். அத்தகைய நிலையில் கருத்து ரீதியாகப் பெண் அரசியலில் ஈடுபட வேண்டுமென்ற ஆவல் பெண்ணுக்கும் கூடவே ஆணுக்கும் ஏற்படும் நிலை கிட்டும்.

பெண்களில் கணிசமானோர் இன்று கல்வி கற்றுத் தொழில்பார்க்கிறார்களே அவர்களெல்லாம் அரசியலில் ஏன் ஈடுபடவில்லை?

கற்றவர்கள் அறிவு பெற்றுள்ளவர்களாக, தாம் பெற்ற அறிவில் விழிப்புள்ளவர்களாக, தொழில் சார்ந்த கல்வி பெற்றுப் பொருள் சேர்த்தலே நோக்கமாகக் கொண்டோராகவே அநேகமானோர் உள்ளனர். இவர்கள் பெற்றுள்ள கல்வி பொருளாதாரச் சுமையைத் தாங்க வேண்டுமென்ற சிந்தனை முனைப்புக் கொள்ளுதே தவிர அரசியலில் ஈடுபடக்கூடிய தேசப்பற்றில் முற்றுமுழுதாகத் தம்மை தோய்வித்துக்

## வாசகர் கடிதம்

அன்புள்ள பத்மா அவர்களுக்கு,

முன்பு நீங்கள் அனுப்பிய பெண்ணின்குரல் இதழ் 22 பற்றியும், நேரில் தந்த இதழ் 23 குறித்தும் நான் கருத்து தெரிவிக்கவில்லை என்ற நினைப்பு மனசில் உறுத்தலாகவே இருக்கிறது. அதனால் எழுதுகிறேன். இதழ் 22 இலங்கை 'தமிழ்ப்பெண் எழுத்தாளர்கள் சிறப்பிதழ்', அழகான அட்டைப்படம், குளுமையான வர்ணங்களோடு வசீகரமாக அமைந்துள்ளது.

இலங்கை தமிழ்ப்பெண் எழுத்தாளர்களின் படைப்புகளைப் பெற்று வெளியிடும் முயற்சியில் ஏற்பட்ட சிரமங்களைக் குறிப்பிட்டிருந்தீர்கள். அதை ஒரு சவாலாக ஏற்று முயன்று வெற்றிகரமாக சாதனை படைத்திருக்கிறீர்கள் என்பதை சிறப்பிதழ் புலப்படுத்துகிறது. பெண்கள் எழுதியுள்ள சிறுகதைகள், கவிதைகள், 'உன்னைத்தான் பெண்ணே' எனும் உரைவீச்சு எல்லாமே தரமாகவும் பாராட்டப்பட வேண்டியனவாகவும் உள்ளன. 'மாதுக்கேது ஓய்வு?' எனும் கவிதை அன்றாடம் பெண் அனுபவிக்கிற வேலைப்பளுவை நன்கு சித்தரிக்கிறது. நீங்கள் எழுதியிருக்கிற 'பெண்களும் படைப்பு இலக்கியமும்' என்பது நல்ல சிந்தனைக் கட்டுரை. 'படைப்புத் துறைக்கு தனியான ஒரு சிந்தனை, ஆர்வம், தன்னையறியாத ஒரு உந்துதல், கற்பனைச் செறிவு, புதுமையும் நுட்பமுமான ஒரு சிந்தனை ஒழுக்கம், நிறைந்த வாசிப்புப் பயிற்சி, போதிய அனுபவம் என்பன துணை செய்கின்றன' என்று சுட்டியிருப்பது சரியானதே. 'எழுத்து என்பது அளவில் அல்ல. அதன் தரத்திலேயே அதன் கனதி காணப்படுகிறது' என்று வலியுறுத்தியிருப்பது நியாயமானது. போற்றுதலுக்குரிய கருத்து.

இதழ் 23 இலங்கையில் நிலவுகிற முக்கியமான பிரச்சினைகளை சிந்திக்கிறது. தொடர்ந்த யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சமூக ரீதியிலும், ஆண் பெண்களிடத்து காணப்படுகிற கஷ்டங்கள், பிரச்சினைகள், பாலியல் கொடுமைகள், மனநிலை பாதிப்புகள், அகதிகள் முகாமில் பெண்கள் அனுபவிக்கிற இன்னல்கள் - அவலங்கள் பற்றி எல்லாம் ஆய்வு நோக்கில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பயனுள்ள கட்டுரைகள். 'மறைந்துள்ள பெண்கள்' (திலின வீரசிங்க) உணர்ச்சிகரமான - உருக்கமான - சொற் சித்திரம். ஒவ்வொரு இதழும் உங்களது ஆசிரியத்துவத்தின் சிறப்பையும் ஆற்றலையும் வெளிப்படுத்துகின்றன.

வாழ்த்துக்கள்.

வல்லிக்கண்ணன்

சென்னை.

கொள்ளக்கூடியதாக இல்லை. இன்றைய கல்வி பரம்பரையாகக் கிடைத்தவற்றைச் சுமக்கும் தன்மையுடையதாக இருக்கின்றதே தவிர அன்றாடச் சிக்கல்களைச் சீர் செய்யக் கூடிய தன்மை குறைந்ததாக, சமூக நடவடிக்கைகளில் பெண்கள் பெரிதாகப் பங்கு கொண்டு சீர்திருத்தும் வகையற்றதாக, சமூகக் கட்டமைப்புக்குள்ளேயே சுற்றிவரக் கூடியதாகவே பெண்களை வற்புறுத்துகிறது. இவற்றிற்கு நாம் பெற்றுக் கொண்ட தவறான கல்வியமைப்பே காரணமாகும். சமூக மரபுக் கோட்பாட்டுகள் பெண்ணை அடக்கி வைத்துள்ளன. அதனை உடைத்து வெளிவரக் கூடிய நிலையில் பெண்களின் சிந்தனைகள், செயற்பாடுகள் தோற்றம் பெறவேண்டும். அதற்கு உதவவே பெண் விழிப்புணர்வு அமைப்புகள் பெரிதும் உதவுகின்றன. இத்தகைய எண்ணம் ஆண்கள் மத்தியிலும் பரவவேண்டும். இத்தகைய விழிப்புணர்வின் மூலம் எதிர்காலத்தில் சிறந்ததொரு மாற்றத்தைக் காணலாம் எனத் திடமாக நம்புகின்றேன். அரசியலில் தீர்மானமெடுத்தல் என்பதே முக்கியமான பகுதியாகும். ஒரு நாட்டை வழிநடத்த ஏனைய உலக நாடுகளுடன் சமமாக நிலை நிறுத்திப் பல்வேறு கைங்கரியங்களையும் சிறப்புறத் தீர்மானிக்கும் திராணி - விசேடமாக சமூக, பொருளாதார, அரசியல் அம்சங்களில் வெற்றியீட்டக் கூடிய திறமை பெண்களுக்கு ஏற்பட வேண்டும்.

இன்றைய சமூக அமைப்பில் ஆண், பெண் சமநிலையற்ற வேறுபாடுகள் இவற்றை வற்புறுத்தும் சில சமூகக் கட்டமைப்புக்கள் பெண்ணைப் பின்னிலைப்படுத்துகின்றன என்பதை நான் அழுத்தி கூற விரும்புகிறேன். என்றாலும் பெண்களுக்கு இத்தகைய ஆற்றலுண்டென்பதை திருமதி பண்டார நாயக்கா, இந்திராகாந்தி, தட்சர் போன்ற முதல்நிலை வகித்த பெண் அரசியல்வாதிகள் பெண்கள் திறமையை நிதர்சனமாக்கியுள்ளனர். மிகவும் குறைந்த தொகையினர் தானே என நீங்கள் கருதலாம். எண்ணிக்கையல்ல தீர்மானிப்பது. அவர்களது தனித்துவமான சிந்தனை, அவசர அவசிய வேளைகளில் அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் அவர்களது சிந்தனைவிரிவு என்பனவே பெண்களுக்கும் இத்துறையில் மிகச்சிறந்த ஆற்றல்கள் உண்டு என்பதைச் செப்புகின்றன.

எண்ணிக்கை இவற்றைத் தீர்மானிப்பதில்லையாயினும் உச்சகட்டத்தை அடைவதற்கு, இலட்சியத்தை எய்துவதற்கு எண்ணிக்கையும் அவசியமென்றே தோன்றுகிறது. ஏனெனில் பல எண்ணிக்கை அனுபவங்கள் மத்தியில் தான் சிறப்புகள் வெடித்துக் கிளம்ப முடியும்.

இதிலும் ஒரு விஷயத்தை நான் தெளிவுபடுத்த வேண்டும். பெண் அரசியலில் ஈடுபடுதல் என்பது ஆண்கள் அமைத்துள்ள வட்டத்துள் நின்று செயற்படும் நிலையை நான் குறிப்பிடவில்லை. இலங்கை அரசியலில் இதுவரை காலமும் இத்தகைய நிலையில் தான் பெண்களது அரசியல் நிலைப்பாடு பெரிதும் பயின்றுவந்துள்ளது. ஆனால் எனது கருத்தின்படி பெண்கள் அரசியலில் பங்குகொள்வதென்பது - நாட்டு, மக்கள், பொருளாதாரக்கல்வி, சிந்தனை நிலைப்பாடுகளை, நன்கு புரிந்துகொண்டு, ஆணாதிக்க விழுமியங்களை நன்கு விளங்கிக் கொண்டு பெண் தன் சுயநிலையில் நின்று சிந்தித்து அரசியலை நடாத்தத் துணிய வேண்டும். பெண்ணின் உரிமைகளைப் போராடி வென்றெடுக்க வேண்டும். பெண்ணும் அரசியலில் ஈடுபடுகிறாள் என்ற பாவனைக்காக, ஆணாதிக்க சமூக அரசியலுக்குள் பொம்மையாக அமிழ்ந்தி விடாமல், பெண்களுடைய பிரச்சினை பெண்ணிலைச் சிந்தனையினூடாகச் தீர்க்கவும் செயல்படவும் கூடிய சூழலை பெண்கள் எய்துவதே உண்மையாக அவர்கள் அரசியல் மயமாதல் என்ற எண்ணக்கருவைத் தரும். பெண்களது கருத்துக்கள், சிந்தனைகள், நடவடிக்கைகள் அரசுகட்டிலேறும், சமூகம் விழிப்புறும். உரிமைகள் வென்றெடுக்கப்பட்டுச் சமதர்ம சமுதாயம் மலரும்!

குறிப்பு :

'பெண்களும் அரசியலும்' என்ற தொனிப்பொருளின் இதழாக மலரும் பெண்ணின்குரல் சஞ்சிகையின் பிரசுரத்திற்காக பெண்ணியவாதியும், சமூகச் சிந்தனையாளரும் பல்வேறு கருத்தரங்குகளை சிறப்புற வெற்றிகரமாக நடாத்திவரும் கௌரி பழனியப்பனிடம் சில கருத்துக்களைத் கேட்டறிந்தோம். அவற்றை தொகுத்து இங்கு கட்டுரையாக வெளியிட்டுள்ளோம். (ஆ-ர்)

# இலங்கையில் சமூக, ஜனநாயக சீர்திருத்த இயக்கங்களில் முன்னோடிகளான சில தமிழ்ப்பெண்கள்

- சித்திரலேகா மௌனகுரு

இலங்கையின் நவீன சமூக அரசியல் வரலாற்றின் உருவாக்கத்திற்குப் பல பெண்கள் பங்களித்துள்ளனர். 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இவர்கள் சமூக சீர்திருத்தம் தொழிலாளர் நலன், அரசியல் ஜனநாயக உரிமைகள் போன்ற பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளனர். எனினும் பல்வேறு துறைகளில் வரலாற்றுக் கல்வியில் இவர்களுக்குப் போதிய அங்கீகாரம் வழங்கப்படவில்லை. பெண்களது செயற்பாடுகள், தகவல் என்ற அளவிலாயினும் கூடப்பதிவு செய்யப்படவில்லை. எந்தவித முக்கியத்துவமும் அற்று, பெயரளவிலும் ஆண்களுக்கு அவர்களது செயற்பாடுகளில் உதவியோர் என்ற அளவிலுமே இப்பெண்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. வரலாற்றியலில் காணப்படும் ஆண் நிலைநோக்கமே பெண்கள் பற்றிய இத்தகைய அலட்சிய மனோபாவத்துக்கு அடிப்படைக் காரணமாகும்.

எனினும் சமீபகாலமாக, இலங்கையில் மறைக்கப்பட்டுள்ள பெண்கள் வரலாறு பற்றிய ஆர்வம் அதிகரித்து வருகிறது. குறிப்பாக இலங்கையில் எழுபதுகளிலிருந்து ஏற்பட்ட பெண் நிலைவாத எழுச்சியும், பெண்கள் இயக்கங்களின் ஆர்வமும் இலங்கைப் பெண்கள் வரலாற்றை உருவாக்குவதற்குத் தூண்டுகோலாக உள்ளன. இலங்கையில் சமூக முற்பகுதியிலிருந்து ஈடுபட்டு உழைத்த பெண்மணிகள் சிலர் பற்றிய ஆய்வுகள் தற்போது வெளிவந்துள்ளன.

இத்தொடர்பில் இலங்கையின் தமிழ் பேசும் பிரதேசங்களில், சமூக சீர்த்திருத்த ஜனநாயக இயக்கங்களில் முன்னின்றுழைத்த சில பெண்மணிகள் பற்றி அறிமுகம் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவர்கள் சமூக சீர்த்திருத்த வாதிகளாகவும் எழுத்தாளர்களாகவும், பத்திரிகையாளர்களாகவும் பணிபுரிந்துள்ளனர். தமது காலத்தில் காணப்பட்ட சமூகப்பழைமை வாதத் தையும், பிற்போக்குத்தனத்தையும் கண்டு மனந் தளர்ந்து விடாது பெண்களுடைய உரிமைகளுக்காக இவர்கள் குரல் கொடுத்தனர். அத்துடன் பொதுவான சமூகநலன் கருதிய செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர்.

இப் பெண்மணிகளுள் ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மங்களம்மாள் மாசிலாமணி என்பவராவர். இவர் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பிரபல வழக்கறிஞராக விளங்கிய கதிரவேற்பிள்ளையின் புதல்வியாவர். மங்களம்மாள் கல்வியறிவும், செல்வாக்கும் மிக்க குடும்பப் பின்னணி கொண்டவர். இவரது உறவினர்கள் சிலர் இந்தியாவில் கல்வி கற்றுத் தொழில் புரிந்தவர்கள்.

மங்களம்மாள் பாடசாலை சென்று முறையாகக் கல்வி கற்றதற்குரிய சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் போதியளவு ஆங்கிலமும் தமிழும் கற்றுத் தமது கல்வி அறிவினை விருத்தி செய்து கொண்டார். இவரது கணவர் மாசிலாமணி கேரளத்தில் கல்வி கற்றவர். ஒரு முற்போக்குவாதி. தேசாபிமாணி என்ற பத்திரிகையை யாழ்ப்பாணத்திலும், பீபிள்ஸ் மகசீன் (Peoples Magazine) என்ற பத்திரிகையைக் கொழும்பிலும் வெளியிட்டவர். இத்தகைய குடும்பச் சூழலில் வாழ்ந்த மங்களம்மாள் சமூக உணர்வு உள்ளவராக வளர்ந்ததில் வியப்பில்லை. யாழ்ப்பாணத்திலும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் உலக நாடுகளிலும் நடைபெறும் விடயங்களை அறியும் வாய்ப்பும் மங்களம்மாளுக்கு இருந்தது. 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பொதுவாக இலங்கையில் பெண்களைப் பற்றிய பழமைவாதக் கருத்துக்களே காணப்பட்டன. பெண்களுக்குக் கல்வி அவசியம் என்ற கருத்தைச் சுதேசிகளும் வெளிநாட்டவரும் அடிக்கடி கூறியபோதும், பெண்கள் பாடசாலைகள் நிறுவப்பட்ட போதும் எத்தகைய கல்வி பெண்களுக்கு அளிக்கப்படவேண்டும் என்பது குறித்துக் கருத்து வேறுபாடு நிலவியது. பெண்கள் குடும்ப வாழ்க்கையைத் திறம்பட நடத்துவதற்குரிய கல்வி பெற்றாலே போதுமானது என்ற கருத்தினைப் பல ஆண் சமூக சீர்த்திருத்தவாதிகள் தெரிவித்தனர். பெண்கள் சமூகப்பணிகளிலும் அரசியல் நடவடிக்கை களிலும் ஈடுபடுவது பெண்களின் இயல்புக்கு உகந்த காரியம் அல்ல என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இத்தகையதொரு பின்னணியிலேயே மங்களம்மாள் பெண்களின் நவீன முன்னேற்றத்திற்காகக் குரல் கொடுத்ததுடன் பத்திரிகை ஸ்தாபனங்கள் ஆகியவற்றையும் ஆரம்பித்தார்.

சமூகப் பணிகளின் மூலம் மக்களை முன்னேற்ற முடியும் என்ற கருத்துக் கொண்டிருந்த மங்களம்மாள் 1962ம் ஆண்டளவில் 'பெண்கள் சேவா சங்கம்

எனும் ஒரு நிலையத்தை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் தொடங்கியதாக அறிய முடிகிறது.

''நாமறிந்த அளவில் இச்சங்கமே தேசிய உணர்வு பெற்ற இலங்கைப் பெண்களின் முதலாவது சங்கம் எனலாம். 1902ம் ஆண்டின் முன் இத்தகைய ஒரு சங்கம் இருந்ததாக அறியமுடியவில்லை. இச்சங்கம் மதச்சார்பற்றதாய் தமிழ் மகளிர்க்குப் புதிய அறிவையும் தன்னம்பிக்கையையும் ஊட்டவல்லதாய் அமைக்கப்பட்டால் பெண் விடுதலையை நோக்கிய முதலாவது சங்கம் எனக் கொள்ளலாம்''. (இராமலிங்கம். வ. 1985).

மங்களம்மாள் இலங்கையின் முதற்பெண் பத்திரிகையாளர் ஆவர்.

இவர் நடத்திய பத்திரிகை 'தமிழ்மகள்' என்பதாம். 1923ம் ஆண்டு இப்பத்திரிகையை இவர் ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட இச்சஞ்சிகை மங்களம்மாள் இந்தியாவில் சில வருடங்கள் வாழ்ந்திருந்தபோது அங்கிருந்தும் வெளிவந்தது.

இச்சஞ்சிகை பற்றித் 'தேசபக்தன்' என்ற பத்திரிகையில் வெளிவந்த விளம்பரம் ஒன்றில் 'பெண்களின் முன்னேற்றத்தை முக்கிய நோக்கமாகக் கொண்ட ஓர் இனிய மாதாந்தப் பத்திரிகை' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்மகள் சஞ்சிகையில் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற வசனம் இலட்சிய வாசகம் போலக் குறிக்கப்பட்டுள்ளது. பெண்கள் எவருக்கும் கட்டுப்பட்டவர்களோ, அடிமைகளோ இல்லை என்பதையும் சுயாதீனமானவர்கள் என்பதையும் இவ்வாசகம் வெளிப்படுத்துகிறது. இச் சஞ்சிகை பெண் விடுதலை, பெண் சமத்துவம், சீதனக் கொடுமை போன்ற பெண்கள் தொடர்பான விடயங்களையும் தீண்டாமை, சுய உற்பத்தியில் ஈடுபடுதல் போன்ற பொதுநல விடயங்களையும் கொண்ட கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது.

இச்சஞ்சிகை ஆரம்பத்தில் மாதாந்தப் பத்திரிகையாகச் சில வருடங்களே வெளிவந்தது. பின்னர் நிதி நெருக்கடியினாலும் வேறு தடங்கல்களினாலும் கால ஒழுங்கற்று வெளிவந்து இறுதிப்பகுதியில் பின்னர் வருடாந்த வெளியீடாக மாறியது. 1971ல் முற்றாக நின்று போயிற்று.

மங்களம்மாள் தமது பத்திரிகை மூலமாக மாத்திரமன்றி அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த ஏனைய பத்திரிகைகள் மூலமாகவும் கருத்துக்களைத் தெரிவித்தார். தேசபக்தன், இந்தசாதனம், ஈழகேசரி, Hindu Organ போன்றன இவர் எழுதிய ஏனைய பத்திரிகைகளாகும்.

பெண்களுக்கு அரசியல் உரிமைகள் தேவை என்பதில் மங்களம்மாள் அசையா உறுதியுடைய வராயிருந்தார். 1927ல் இலங்கைக்கு வந்த டொனமூர்க் கொமிஷன் அரசியல் சீர்த்திருத்தங்களை மேற் கொள்வதற்காக இலங்கையரின் ஆலோசனை களையும் கேட்டது. தேர்தலில் வாக்களிக்கும் உரிமையைப் பொதுமக்கள் மட்டத்தில் விரிவுபடுத்துவதற்கு சுதேசிகள் மட்டத் திலிருந்து எதிர்ப்பும் கிளம்பியது. சொத்து, கல்வி, ஆகியவை உடைய ஆண்களே தேர்தலில் வாக்களிக்கத் தகுதியானவர்கள் என இவர்கள் வாதாடினார். இக்கருத்தை பெண்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துப் பெண்கள் வாக்குரிமைச் சங்கம் (Women Financhise Union) நிறுவப்பட்டது. லேடி டயஸ் பண்டாரநாயக்காவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பில் திருமதி. கெராட் வீரக்கோன் அக்னஸ் டி சில்வா, டபிள்யூ. ஏ. டி. சில்வா போன்றோருடன் ஈ.ஆர். தம்பிமுத்து திருமதி நல்லம்மா, சத்தியவாகீஸ்வர ஐயர் போன்ற தமிழ்ப்பெண்களும் அங்கம் வகித்தனர். இச்சங்கம் பெண்களுக்கு வாக்குரிமை வேண்டுமெனக்கோரி டொனமூர்க் கொமிஷன் முன்னர் 1928ம் ஆண்டு ஜனவரிமாதம் 11ந் திகதி சாட்சியமளித்தது. (The Independent 14 Jan 1928).

பெணகளது இத்தகைய நடவடிக்கை களுக்குக் கடும் எதிர்ப்புகள் தெரிவிக்கப் பட்டன. சேர். பொன்னம்பலம் இராமநாதன் இத்தகைய எதிர்ப்பாளர்களில் ஒருவராக முன்னின்றார். பொதுவிடயங்களில் ஈடுவது பெண்களுக்குச் சற்றும் பொருத்தமற்றதாகும் என்று கூறினார். இத்தகைய சமூகப் பழமைவாதக் கருத்துக்களை அக்காலத்தில் வெளிவந்த பத்திரிகைகள் சிலவும் எதிரொலித்தன. யாழ்ப்பாணத்துப் பத்திரிகை யொன்று பின்வருமாறு ஆசிரியத் தலையங்கம் எழுதியது.

'சென்ற வருடம் இலங்கைக்கு வந்த அரசியல் விசாரணைச் சங்கத்தார் இங்குச் செய்யத்தக்க அரசியல் திருத்தங்களுள் கூட நிருபணசபை போன்ற சபைகட்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தனுப்பும் விஷயத்தில் பெண்களுடைய சம்மதத்தைப் பெற்றலும் ஒன்றெனக் கூறிவிட்டனர். ஆனால் விசாரணைச் சபையார் தாமாக இதனைக் கூறினாரல்லர். கொழும்பிலேயுள்ள ஆண் தன்மை பூண்ட தன்னிஷ்டப் பெண் ஜன்மங்கள் சிலர் கேள்விக்கிசைந்தே விசாரணைச் சபையாரும் பெண்ணென்றால் பேயுமிரங்கு மென்னும் பழமொழிப்படி உடன்பட்டு விட்டார்கள். இத்திருத்தம் எங்கள் சமயம், சாதி, தேசம், பழக்கவழக்கம், கொள்கைகள

என்று சொல்லப்படுவன எல்லாவற்றிற்கும் மாறானதாகும். பெண் தன்னெண்ணத்திற்கு நடந்து கொள்ளுதல் சைவ நன்மக்களுள் எக்காலத்திலுமில்லை. கற்பெனப்படுவது சொற்றிறம்பாமையென்ற பிரகாரம் நாயகனுடைய சொற்படி ஒழுக வேண்டிய பெண் அவன் சொல்லைமீறி இருமனப்படு வாளேல் அவள் செல்வத்தோடு கூடியவளா யினுமென், பேரழகோடு கூடியவளாயினுமென், கல்வியறிவு வாக்குச் சாதுரியத்தோடு கூடியவளாயினுமென் அவள் பொது மகளாவாள்...... மேலும் பறங்கியர், ஒல்லாந்தர் முதலாம் அந்நிய சமயத்தினர் இந்த இலங்கையைப் பரிபாலித்த போது சமய நிஷ்டூரம் செய்தனரேயன்றி இந்த விதமாக எங்கள் சாதிக்கட்டுபாட்டையழித்து இங்குள்ள பெண்களைப் பொதுக்கருமங்களிற் பிரவேசிக்கச் செய்து பொது மகளிராக்கி விடவில்லை. பெண்களுக்கும் ஆண்களுக்கு மிடையே பேதமில்லையெனும் கொள்கை பூண்ட மேலைத் தேசத்த வர்களாகிய விசாரணைச் சங்கத்தார் த்ங்களைப் போல எங்களையும் தங்கள் பெண்களைப் போல எங்கள் பெண்களையும் மதித்து தீமைக்கும் கலகத்திற்கும் சாதி சமய மகத்துவங்களையும் பழைய சீர்த்திருத்தத்தையும் கெடுத்ததற்கும் ஏதுவாகவுள்ள இந்த போலிச் சுவாதீனத்தை ஏற்றுக்கொள்ளச் சொன்னால் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது கடப்பாடாகுமா?''

(இந்து சாதனம் 08-11-1928)

பெண்களது அரசியற் சுயாதீனத்தை மேற்கண்டவாறு மறுத்து எழுதிய இந்துசாதனப் பத்திரிகையின் ஆங்கிலப் பதிப்பில் பெண்களது வாக்குரிமையின் அவசியம் குறித்து மங்களம்மாள் ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

''உலகம முழுவதும் பெண்கள் தமது நிலையை உணர்ந்து தமது உரிமைக ளுக்காகப் போராடத் தொடங்கி விட்டனர். இந்தியாவில் பெண்கள் வாக்களிப்பதற்கு மாத்திரமன்றி, முனிசிபல் கவுன்சில், சட்டசபை போன்றவற்றுக்கான தேர்தல்களுக்கு வேடபாளர் ஆவதற்கும் உரிமையுடைவர்கள். இத்தகைய உரிமைகள் அவர்களுக்கு இலகுவில் கிடைத்துவிடவில்லை. அவர்கள் தாமே தமது உரிமைகளுக்காகப் போராடியுள்ளனர். ஆனால் எமது இலங்கைப் பெண்கள் இத்திசையில் தமது சுட்டுவிரலைத் தானும் அசைக்கவில்லை. எனவே சகோதரிகளே, நாம் எமது உரிமைக ளுக்காகப் போராடுவோம்; அவை கிடைக்கும் வரை சளைக்க மாட்டோடம்.

''எமது உரிமைகளைத் தாமாக எவரும் எமக்கு வழங்கப் போவதில்லை. நாம வழங்கும் சீதனத்தின் மூலம் வாக்களிக்கவும் சட்டசபைப் பிரதிநிதிகளாகத் தேர்ந் தெடுக்கப்படவும் உரிமைபெற்ற எமது சகோதரர்கள் எமது பிறப்புரிமைகள் பற்றி ஒரு சொல்லைத் தானும் விசாரணைச் சபையாருக்கு அனுப்பிய பல்வேறு விண்ணப்பங்களில் கூறுவதற்கு நினைக்க வில்லை...... நாம் ஆண்களுடன் சமஉரிமை பெற வேண்டும். வாக்களிப்பதற்கு மாத்திரமல்ல சட்டசபைப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படும் உரிமையும் எமக்குத் தேவையானது. சுருக்கமாகக் கூறின் இப்போது நிலவும் அசமத்துவ நிலை நீக்கப்பட்டு இலங்கைப் பெண்கள் ஆண்களுடன் சமத்துவமான அரசியல் உரிமைகளைப் பெறவேண்டும்'' (Hindu Organ 03-10-1927).

சேர் பொன் இராமநாதன் போன்றோர் பெண்களது சமூகப் பங்களிப்பை மறுத்துப் பெண்களுக்கு வீடே உலகம் என்ற கருத்தை வற்புறுத்தியதற்கு மாறாக மங்களம்மாள் விவாகம் செய்யாமல் சமூகப்பணி செய்வது பற்றியும் குறிபபிட்டார்.

''பெண்களுக்கு விவாகம் ஒன்றே முடிந்த முடிவு எனக் கருதக்கூடாது. பெண்கள் கன்னிகளாக இருந்து கடவுட்பணியோ சமுதாய சேவையோ செய்ய முடியும்'' (இராமலிங்கம். வ. 1985:17) என்றும் எழுதினார்.

மங்களம்மாள் யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்லாது இலங்கையின் ஏனைய பகுதிகள் சிலவற்றிற்கும் தமது பணிகளை விரிவுபடுத்தினார். குறிப்பாக திருகோண மலைக்குச் சென்று அங்கு பெண்கள் அமைப்புகளில் சொற்பொழி வாற்றுவதிலும் ஈடுபட்டார். திருகோணமலை மாதர் ஐக்கிய சங்கத்தின் 11ம் ஆண்டு நிறைவு விழாவுக்குத் தலைமை வகித்து மாதர் சங்கங்களின் நோக்கங்கள் பற்றியும் உலக மேம்பாடு குறித்துப் பெண்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் குறித்தும் உரையாற்றினார். (ஈழகேசரி 11-3-1931) இந்தியாவில் தங்கியிருந்த சில வருட காலத்திலும் அங்கும் அரசியல் காரியங்களில் ஈடுபட்டார். 1927ல் சென்னையில் நடைபெற்ற மாநகரசபைத் தேர்தலில் எழும்பூர் தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டார். இவருக்கு எதிராகப் போட்டியிட்ட ஜஸ்டிஸ் கட்சி வேட்பாளர் மிகக்குறைந்த வாக்குகளாலே வெற்றி பெற்றார்.

இத்தகைய பன்முக ஆளுமை கொண்ட மங்களம்மாள் பற்றிய விவரங்கள் இன்னும் முழுமையாக அறியப்படவில்லை. அவரது எழுத்துக்கள் யாவும் அட்டவணைப் படுத்தப்பட்டால் அவரது கருத்துக்களின் பரப்பைத் தெளிவாக அறிய முடியும்.

மங்களம்மாளின் சமகாலத்தவரான இன்னோர் முக்கிய பெண்மணி மீனாட்சியம்மாள் நடேசையராவர். தமிழ்நாடு தஞ்சாவூரைச் சேர்ந்த இவர் இளமைக் காலத்தில் இலங்கை வந்தார். மலைநாட்டின் முதலாவது தொழிற்சங்கத்தை நிறுவியவரான நடேசையரை மணமுடித்த மீனாட்சியம்மாள் மலைய மக்களுக்கான சேவையிலேயே தனது வாழ்நாளைக் கழித்தார்.

மங்களம்மாளைப் போலவே மீனாட்சியம்மாளும் எழுத்தாளராவர். பத்திரிகைத் துறையிலும் ஈடுபட்டவர். நடேசையர் வெளியிட்ட தேசபக்தன் எனும் பத்திரிகையில் தேவையான போது தலையங்கங்களும் கட்டுரைகளும் எழுதினார். அத்துடன் ''இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை'' என்ற தமது பாடல் தொகுப்பொன்றையும் 1940ம் ஆண்டு வெளியிட்டார்.

மீனாடசியம்மாள் மலையகத் தொழிலாளரின் நலனில் பெரும் அக்கறை கொண்டிருந்தார். இக்காலத்தில் மலைநாட்டுத் தொழிலாளர் நிலைமை மிக மோசமானதாய் அமைந்திருந்தது. அரைஅடிமை நிலைமையில் தொழிலாளர் வாழ்ந்தனர். தோட்டங்களில் காணப்பட்ட கங்காணி முறை, துண்டு முறை போன்றவை அதிகளவு சுரண்டலுக்குக் காரணமாகின. பெண் தொழிலாளர் நிலைமை ஏனையவர் நிலையை விடச்சிரமம் நிறைந்ததாய்க் காணப்பட்டது. ஒடுக்குமுறைச் சட்டங்களுக்குத் தமது எதிர்ப்பை எந்தவிதத்திலாவது தெரிவிப்போருக்குத் தண்டனை வழங்கப்பட்டது. இத்தொடர்பில் பல பெண்களும் கூடக் கடூழியச் சிறைத்தண்டனை பெற்றனர்.

இத்தகைய ஒரு பின்னணியிலேயே மலையகத்துத் தொழிலாளரின் துயரினை விபரிப்பதாகவும், இவற்றை நீக்குவதற்குமுரிய செயல்களில் ஒன்றிணைந்து ஈடுபடுமாறு தூண்டுவதாகவும் இவரது பாடல்கள் அமைந்தன. தமது கருத்துக்களைப் பரப்புவதற்குரிய சாதனமாக இசையைக் கையாண்டார். அவரது பாடல் தொகுப்புக்கு எழுதிய முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''இலங்கைவாழ் இந்தியர்களின் நிலைமை வர வர மிகவும் மோசமாகிக் கொண்டே வருகிறது. இலங்கை வாழ் இந்தியமக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தங்களது உரிமைகளை நிலை நாட்டுவதற்காகத் தீவிரமுடன் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. அத்தகைய பிரசாரம் பாட்டுகள் மூலமாகச் செய்யப்படின் அதிக பலனளிக்கும். இதை முன்னிட்டே இன்று இலங்கை வாழ் இந்தியர்களின் நிலைமையைப் பாட்டுக்களின் மூலம் எடுத்துக் கூற முன்வந்துள்ளேன். இந்தியர்களைத் தூக்கத்தில் ஆழ்ந்து விடாது தங்களது உரிமைகளை நிலைநாட்டுவதற்குக் தீவிரமாகப் போராடும்படி அவர்களை இப்பாட்டுகள் தட்டியெழுப்ப வேண்டுமென்பதே எனது அவா'' (மீனாட்சியம்மாள் நடேசையர் : 1940)

மனாட்சியம்மாள் பொதுக்கூட்டங்களில் பாடல்கள் பாடித் தொழிலாளரிடையே விழிப்புணர்வைத் தட்டியெழுப்பியது மாத்திரமின்றி எழுத்துத்துறையிலும் ஈடுபட்டிருந்தார். பெண்களது முன்னேற்றம் கருதியதாக இவரது பெரும்பாலான கட்டுரைகள் அமைந்திருந்தன. தேசபக்தன் பத்திரிகையில் 'ஸ்திரீகள் பக்கம்' என ஒரு பகுதியை ஆரம்பித்தார். இது 1928ம் ஆண்டு முற்பகுதியிலிருந்து ஆரம்பமாயிற்று. பெண்களின் சுதந்திரம் சமத்துவம் ஆகியவற்றை வற்புறுத்திய மீனாட்சியம்மாள் பெண் கல்வி முன்னேற்றம், பெண்கள் தொடர்பான சட்டச் சீர்த்திருத்தங்கள் ஆகியவை குறித்து இப்பக்கத்தில் அடிக்கடி எழுதினார். பெண்களது சுதந்திரம் முன்னேற்றம் பற்றிப் பேசியும் எழுதியும் வந்தால் மாத்திரம் போதாது. நடைமுறையில் இவற்றைப் பிரதிபலிக்கும் செயல்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என இவர் அடித்துக் கூறினார்.

''ஸதிரீகள் முன்னேற்றமடைய வேண்டுமெனப் பலபேர்கள் எழுத்து மூலமாயும், வெறும் பேச்சாகவும் பேசுகிறார்களே தவிரக் கையாள்வது கிடையாது. சில மகான்களும் பிரசங்க மேடைகளில் நின்று பெண்களுக்குக் கல்வி வேண்டும். சுதந்திரம் வேண்டும். அவர்கள் முன்னேற்றமடையாவிட்டால் தேசம் முன்னேற்றமடையாது என்று வாயால் பேசுகிறார்கள். அவர்கள் வீட்டில் அம்மாளுக்கோ கோஷாதிட்டம். இவ்வாறு விபரம் அறிந்தவர்கள் நிலைமையே மோசமாயிருந்தால் அதிகம் படிப்பறிவில்லாத ஆடவர் தங்கள் மனைவிமார்களை எப்படி நடத்துவார்கள்? பெண்மக்கள் சிலர் பெண்கள் முன்னேற்றத்திற்காக ஈடுபட்டு உழைத்தாலும் அதற்கு ஆயிரம் இடையூறுகள் எற்படுகிறதே தவிர அனுகூலங்கள் ஏற்படுவது அரிதாக இருக்கிறது'' என எழுதினார் அவர். (தேச பக்தன் 18-6-1928).

இக்காலத்தில் நிகழ்ந்த பெண்கள் வாக்குரிமை இயக்கத்திற்கும் மீனாட்சியம்மாள் ஆதரவு அளித்தார். பெண்கள் வாக்குரிமைச் சங்கத்தில் அங்கம் வகிக்காவிடினும் பெண்களது வாக்குரிமை தொடர்பாக அக்காலத்தில் நிகழ்ந்த செயற்பாடுகளையும் விவாதங்களையும் இக்கட்டுரையின்

முதற்பகுதியில் குறிப்பிட்டதுபோல பெண்களுக்கு வாக்குரிமை அளிப்பது பாரதூரமான தவறு என்று கருத்துக் கொண்டிருந்தனர். குறிப்பாகச் சேர். பொன்னம்பலம் இராமநாதன் பெண்களுக்கு வாக்குரிமை அளிப்பதை மிக வன்மையாக எதிர்த்தார்.

''குடும்ப அங்கத்தவர்களுடைய இதய அமைதி யையும் இசைவையும் குலைத்து அமைதியின்மைக்கு வழிவகுத்து விடும்'' என்றும் (டெயிலி நியூஸ் 1-12-27 ) அது ''பன்றிகளின் முன்னர் முத்தைத் தூவுவது போலாகும்'' எனவும் (டெயிலி நியூஸ் 16-1-1928) அவர் கூறினார். இராமநாதனுடைய இத்தகைய நிலைப்பாடு குறித்துப் பெண்கள் மத்தியில் கடுமையான விமர்சனம் காணப்பட்டது. பெண்கள் வாக்குரிமைச் சங்கத்தின் 'எதிரியாகவே' இவர் கருதப்பட்டார்.

மீனாட்சியம்மாள் தேசபக்தனில் எழுதிய கட்டுரையொன்றில் இராமநாதனின் இத்தகைய பிற்போக்குத்தனமான நிலைப்பாடு குறித்துக் கண்டனஞ் செய்தார்.

'டொனமூர் கமிஷன் முன் இலங்கைப் பெண்களுக்குச் சொத்துரிமை கொடுக்க வேண்டும் என வற்புறுத்திக் கனம் நடேசையரும் ஸ்ரீமான் பெரிசுந்தரம் முதலியோரும் சாட்சியம் கொடுத்துள்ளனர். ஆனால் சேர். பொன்னம்பலம் இராமநாதனைப் போன்றவர்கள் குறுகிய நோக்கத்துடன் பெண்களுக்குச் சமஉரிமை கொடுக்கக் கூடாதென்ற விஷயமானது பொது மக்களுக்கு ஆச்சரியமாகத்தானிருக்கும். இந்தியாவை விட முற்போக்கடைந்தி ருப்பதாகப் பாவிக்கும் இலங்கையில் ஸ்திரீகளுக்குச் சுதந்திரம் கொடுக்கக் கூடாதென்றால் இலங்கை எவ்விதத்தில் முற்போக்கடைந்திருக்கிறது? சமீபத்தில் சேர்.ஜெகதீஸ் சந்திரபோஸ் கல்கத்தா பெண்கள் விடுதிச்சாலையைத் திறந்து வைக்கையில் 'பெண்கள் ஆண்களுக்கு அடிமைகள் என்ற எண்ணத்தை விட்டு விட வேண்டும். ஆண்களும் பெண்களும் முன்னேற்றமடைவதற்குப் பெண்கள் வழிகாட்டியாக இருக்க வேண்டும். பெண்கள் அத்தகையதொரு நோக்கம் கொண்டு உலகவாழ்க்கையில் இறங்குவார்களென நம்புகிறோம்'' என்றார். இப்பொன்மொழிகளை சேர்.இராமநாதன் போன்றோர் கவனிப்பார்களாயின் அவர்கள் நிலை மாறினாலும் மாறலாம். உலக சரித்திரத்தில் பெண்களின் உதவியின்றி விடுதலை பெற்ற நாடு ஏதேனும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. சேர். இராமநாதன் போன்றோர்க்கு இலங்கையில் பெண்கள் பொதுசன சேவையில் ஈடுபடக் கூடாதென்றால் ஒரு பெண் கூட எக்காலத்திலும் வெளியில் வரக் கூடாதென்று ஒரு சட்டம் நிரந்தரமாக ஏற்படுத்த முயற்சித்தல் மேலாகும்'' (தேசபக்தன் 13-4-1928)

பெண்கள் முன்னேற்றத்திற்கு எதிரான கருத்துக் கொண்டிருந்தவர்களை இவ்வாறு காரசாரமாக விமர்சித்த மீனாட்சியம்மாள் அதே சமயம் பெண்கள் உரிமைக்காகச் செய்யப்பட்ட நகரத்து உயர்குலத்துப் பெண்களுக்கு அவர்களது நடவடிக்கைகளை மேலும் பரவலாக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் எடுத்துக் கூறினார். குறிப்பாகப் பெண்கள் வாக்குரிமைச் சங்கம் பற்றிக் கூறும்போது,

'இச்சங்கமானது டொனமூர் கமிஷன் இலங்கைக்கு வந்த காலத்தில் ஆரம்பிக்கப் பெற்றதெனினும் தங்கள் வேலையைச் செவ்வனே செய்து முடித்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இச்சங்கத்தினர் இது வரை செய்துள்ள வேலை எப்படி இருந்த போதிலும் இனித்தான் அதிக வேலை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மேற்படி சங்கத்திற்கு வருஷ சந்தா ரூபா 50ஆக வைத்திருக்கிறபடியால், சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இதில் சேர்ந்துழைக்க வசதியிராது. பணம் படைத்தவர்கள் மாத்திரம் தங்கள் காரியத்தைச் செய்து முடிப்பது போதுமானதாகாது. எல்லா சகோதரிகளும் கலந்துழைக்க வேண்டிய வேளையில் பணம் படைத்தவர்கள் மாத்திரம் தலையிடுவதைக் கொண்டு அதிக பலன் கிடைக்காது. ஆகவே சகோதரிகள் தாங்கள் கொண்ட காரியத்தைச் செய்து முடிக்க வேண்டுமானால் ஆங்கிலம் தெரியாத சகோதரிகளிடத்தும் பிரசார வேலையைத் துவக்க வேண்டும்''
(தேசபக்தன் 26-1-1929)

மீனாட்சியம்மாள் காந்திய இயக்கத்தாலும் இந்தியாவில் நிகழ்ந்த முற்போக்குச் செயற்பாடுகளாலும் கவரப்பட்டிருந்தார் என்பது அவர் தேசபக்தன் பத்திரிகையின் ஸ்திரீகள் பக்கத்தில் பிரசுரித்த விடயங்களிலிருந்து தெரிய வருகிறது. பெண்கள் பற்றி காந்தியின் கருத்துக்கள், இந்தியாவில் பெண்கள் தொடர்பாக ஏற்பட்ட சட்ட சீர்திருத்தங்கள் பற்றிய செய்திகளை அவர் அடிக்கடி பிரசுரித்தார். அத்துடன் இந்தியாவுக்கும் சென்றிருந்த காலங்களிலும் அங்கு அரசியல் நடவடிக்கையில் பங்குபற்றினார். கோயம்புத்தூரில் நடந்த சத்தியாக்கிரகமொன்றில் பங்கு பற்றிய மைக்காக மங்களம்மாளுக்கு ஆறுமாத கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டதாகச் செய்தி வெளியாகியுள்ளது.
(ஈழகேசரி 27-3-30).

இவர்களை விட டாக்டர் நல்லம்மா,

சத்தியவாகீஸ்வர ஐயர் (தந்தை பெயர் முருகேசு) நேசம் சரவணமுத்து, திருமதி. ஈ. ஆர். தம்பிமுத்து, திருமதி அன்னம்மா முத்தையா, பரமேஸ்வரி, கந்தையா, நோபிள் இராஜசிங்கம் போன்றோர் இருபதாம் முன்னரைக் காலப் பகுதியில் அரசியல் துறையிலும் சமூக முன்னேற்றத்துறையிலும் உழைத்த பெண்களிற் சிலராவர். இவர்களுள் பெரும்பாலோர் பற்றிய தகவல்கள் இன்னும் அறியப்படாமலே உள்ளன.

இவர்களுள் நேசம் சரவணமுத்து இலங்கைச் சட்டசபைக்கு முதன்முதல் நியமிக்கப்பட்ட பெண் ஆவார். 1931முதல் 1947ஆம் ஆண்டு வரை இவர் கொழும்பு வடக்கிற்கான அங்கத்த வராயிருந்தார். இவர் சட்டசபை அங்கத்தவராகப் பதவி வகித்த காலத்தில் வறிய மக்கள், பெண்கள் தொடர்பான பணம், சம்பளச்சபை நிறுவுதல் பெண் ஆசிரியர்கள் திருமணமானதும் வேலையிலிருந்து நீக்கப்படும் நடைமுறையை அகற்றுதல் என்பன இவர் சட்டசபையில் எழுப்பிய முக்கிய பிரேரணைகளில் சிலவாகும்.

வருமானவரி விதிக்கும் தராதரத்திற்குக் குறைவாகச் சம்பளம் பெறும் தொழிலாளர்களின் நலன் கருதிச் சில விதிகளை இயற்றுவதற்கான சட்டம் ஒன்றை வர்த்தக, தொழில் அமைச்சு விரைவில் உருவாக்க வேண்டும் என்று பிரேரிக்கப்பட்டது. இச்சட்டம் பல நிலைகளிலுள்ள தொழிலாளருக்குத் தராதரச் சம்பள அளவு, சம்பளத்தின் கீழ் எல்லை என்பவற்றை நிர்ணயிப்பதற்கான சம்பளச்சபை (Wages Board) ஒன்றை நிறுவுதல், தொழிலாளரது சுகாதாரம் வீட்டு வசதிகள் ஆகியவற்றுக்குத் தொழில் கொள்வோரைப் பொறுப்புடைவராக்குதல், வைத்திய வசதி, இலவசக்கல்வி, ஓய்வூதியம், காப்புறுதி ஆகியவற்றுக்கான திட்டம் ஆக்குதல் வேண்டும் எனவும் கோரப்பட்டது. (The Hansard 11-6-1936 Au : 586 )

ஆசிரியர்களாகத் தொழில் புரியும் பெண்கள் தமக்குத் திருமணமானதும், வேலையிலிருந்து கட்டாயமாக ஓய்வு பெறவேண்டும் எனக் கல்வித்திணைக்களம் ஆலோசனை வழங்கியிருந்தது. இப்பிரேரணை நீக்கப்பட வேண்டுமென நேசம் சரவணமுத்து வாதாடினார். இது மாணவிகளின் கல்வி நலத்துக்கும் நாட்டினது நலத்துக்கும் உகந்ததல்ல என அவர் கூறினார். இவ்விடயம் பற்றி ஆராய்ந்த கல்விக்கான நிர்வாகக் குழு திருமணமான பெண் ஆசிரியர்களை எவ்வித நிர்ப்பந்தத்திற்கும் உட்படுத்தக் கூடாது என முடிவு செய்தது. (The Hansard : 26-1-1939)

நல்லம்மா சத்தியவாகீஸ்வர ஐயர் ஒரு வைத்தியராவார். இவரது கணவர் நடேசையருடன் சேர்ந்து மலையகத்தில் தொழிற்சங்கத்தை உருவாக்க உழைத்தவராவர். நல்லம்மா மீனாட்சியம்மாளுடன் சேர்ந்து மலையகத் தொழிலாளரிடையே சமூகசேவை செய்தார். அத்துடன் 1928ல் பெண்கள் வாக்குரிமைச் சங்கம் நிறுவப்பட்டபோது அதன் முக்கிய அங்கத்தவர்களில் ஒருவரானது மாத்திரமன்றி இணைச் செயலாளராகவும் பணிபுரிந்தார்.

திருமதி. ஈ. ஆர். தம்பிமுத்துவும் பெண்கள் வாக்குரிமைச் சங்கத்தின் ஸ்தாபக அங்கத்தவர். இவரது கணவர் 1923இல் கிழக்கு மாகாணத்துச் சட்டசபைப் பிரதிநிதியாக இருந்தபோது பெண்களுக்கு வாக்குரிமை தொடர்பான ஒரு பிரேரணையை அறிமுகப்படுத்தினார். ஆனால் அப்போது அப்பிரேரணை சட்டசபையில் ஆதரவு பெறவில்லை. (The Hansad CNC 649) தொடர்ந்து திருமதி தம்பிமுத்து பெண்களுக்கான வாக்குரிமைக் கோரிக்கையை வற்புறுத்தினார். பெண்கள் வாக்குரிமைச் சங்கம் நிறுவப்பட்டபோது அதன் உபதலைவர்களின் ஒருவரானார். 1927ம் ஆண்டு டிசம்பர் 7ந் திகதி முதன்முதல் இச்சங்கத்தை ஸ்தாபிப்பதற்காகப் பெண்கள் கூடியபோது திருமதி. தம்பிமுத்துவே பெண்கள் வாக்குரிமைச் சங்கம் - Women Franchise Union என்ற பெயரைப் பிரேரித்தார். (Daily News 8 - 12-1927)

இதுவரை மேலே கூறிய விடயங்களிலிருந்து நகர் சார்ந்த குடும்பத்துப் பெண்கள் மாத்திரமன்றி கணிசமான அளவு வெவ்வேறு பிரதேசங்களைச் சார்ந்த பெண்களும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து சமூக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டமை புலனாகிறது. எனினும் இலங்கையின் நவீன அரசியல் சமூக வரலாற்றில் பெண்களின் பங்களிப்பு பற்றிய முழுமையான தகவல்கள் கிடைக்கவில்லை. இந்நிலைக்கு வரலாற்றியலில் காணப்படும் ஆண்நிலைநோக்கு என்கிற காரணம் மாத்திரமேயன்றி பொதுவாகவே சமூகத்தில் பெண்கள் பற்றி நிலவும் அலட்சிய மனேபாவத்தால் அவர்களைப் பற்றிய சான்றுகள் பாதுகாக்கப்படாது அழிந்து போனதும் இன்னோர் காரணமாகும். இத்தகைய தடங்கல்களைத் துணிவோடு எதிர்கொண்டு தகவல்களைத் திரட்டிப் பெண்கள் வரலாற்றை மீளமைக்கும் பணி இன்றைய பெண் நிலை ஆய்வாளர்களின் பாரிய பணியாக உள்ளது.

(நன்றி. நிவேதினி 94)

# அரசியலில் பெண்கள்

எம். ரி. கௌரி

இவ்விடத்தில் நாம் இரண்டு விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒன்று அரசு என்பதன் கட்டமைப்பு. அடுத்தது பெண்களின் வாழ்நிலை கட்டமைப்பு.

இதில் அரசு என்பது தந்தைவழிச் சமூகத்தின் வழியாக அதிகாரத்துவம் சார்ந்த ஆளுமையாக கட்டமைக்கப்பட்டுள்ளது. பெண்களின் வாழ்நிலை கீழ்படிந்த விட்டுக் கொடுத்தல் பண்புடன் கட்டமைக்கப்பட்டு ள்ளது.

அரசு சமூகம் சார்ந்து இருக்கிறது. பெண்களின் வாழ்நிலை குடும்பம் சார்ந்து நிற்கிறது. இந்த இடத்தில் வைத்து பெண்களின் வாழ்நிலையை இன்னும் விபரித்துப் பார்ப்போமானால், மறு உற்பத்தி தொடர்பாக பெண்ணுக்கு இருக்கும் கடப்பாடும் குடும்பம் சார்ந்து அவளை நிலை நிறுத்துவதால் பொதுமக்களின் கடமைகளில் ஈடுபடுவது தவிர்க்கப்படுகிறது. இதை இன்னும் இலகுவாக விளங்கிக் கொள்வதானால் 'குடும்பப்பெண்' ஒருவனுக்குரிய பெண் - பொது மக்களின் நலனுக்கு 'பொதுமகள்' ஆக முடியாது. இங்கே 'பொதுமகள்' என்ற அர்த்தமே ஒழுக்கவியல் ரீதியாக பெண்களை கீழ்நிலையில் வைத்துப் பார்ப்பது. எனவே, இந்த 'அரசு' என்பதன் கட்டமைப்புக்கும், எமது கலாச்சாரத்தில் பெண்களின் வாழ்நிலை கட்டமைப்புக்கும் இருக்கும் குணாம்சங்கள் இருவேறு துருவங்கள்.

இவ்வாறு இருந்தும் கூட தெற்காசிய நாடுகளில் பெண்களின் தலைமைத்துவத்தில் தான் நாடுகள் பரிபாலிக்கப்படுகின்றன. உலகில் முதல் பெண் பிரதமரைக் கொண்ட பெருமையுடைத்து நம்நாடு! இதன் பின்னணியைப் பார்த்தால் குடும்ப அமைப்பு க்குள் இருந்து பெண் வந்த நிலை புலப்படும்.

தந்தைக்குப்பின் மகளும், கணவனுக்குப் பின் மனைவியும் ஆட்சிக்கு வந்திருக்கின்றனர். இதுகூட தந்தையின் கொள்கையை மகளும், கணவனின் கொள்கையை மனைவியும் நிறைவேற்ற வேண்டும் என்ற ஆவலில், ஒரு குடும்ப உந்துணர்வில் வருவதாகத்தான் இருக்க முடியும். அதிலும் அவர்கள் அகால மரணங்களைத் தழுவியிருந்தால், அந்த ஆற்றாமையை தீர்க்கும் நோக்கில் ஆட்சிப்பீடம் ஏறியவர்களாகத்தான் அவர்களை இனங்காண முடியும்.

பொதுமக்களுக்குரிய நலன்களை கவனிக்கும் நோக்கில் ஆவலாக வந்தவர்கள் என்பது இல்லை.

சரி இவ்வாறு ஒருவாறு அரசியலில் பெண் நுழைந்தாலும் அங்கே எதிர்கொள்ளப் போகும் நடைமுறைச் சிக்கல் பாரியது. இலஞ்சம், ஊழல், மோசடி, பயங்கரவாதம் என நிரம்பியிருக்கும் அரசியல் கலாச்சாரத்தில், ஜனநாயகம் என்பதே இல்லாத ஜனநாயக நாடுகளின் அரசியல் கலாச்சாரத்தில், குடும்ப அலகிற்குள் வாழ்ந்த பெண் கோலோச்ச முடியாது.

ஆண் வழிப்பட்ட எண்ணப்பாங்கில் கட்டமைக்கப்பட்டிருக்கும் 'அரசில்' அரசியல் சாணக்கியம் மிக்க பெண்ணாக அவள் இனம் காணப்பட மாட்டாள்.

எனவே, அரசியலில் பெண்கள் ஈடுபடவேண்டுமானால், பெண்ணின் வாழ்நிலை கட்டமைப்பில் பால்நிலை சார்ந்த சமத்துவம் பேணப்பட்டு சில மாற்றங்கள் நடக்க வேண்டும்.

குடும்ப அலகில் ஜனநாயகப் பண்பு வேண்டும். இவை பாடப் புத்தகங்களில் இருந்து தெளிவுபடுத்தப்பட வேண்டும். சிறுவயது முதல் கொண்டு ஆண் - பெண் பிள்ளைகள் குடும்பம் - அரசு என்ற இரண்டு அலகினதும் கட்டமைப்புக்களை உள்வாங்க வேண்டும். பெண்ணுக்கு வீடே உலகம், ஆணுக்கு உலகமே வீடு, என்ற வரையறைகள் தகர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு செய்யப்படும்போது, ஆண்வழிப்பட்ட அல்லது பெண் வழிப்பட்ட என்ற எண்ணத்திற்கே இடமில்லாது, 'அரசு' என்பதன் கட்டமைப்பு பால் சமத்துவத்துடன் கூடி நிலைநிறுத்தப்படும் போது, பெண் இயல்பாகவே அரசியலில் இணைந்து கொள்வாள். ஆண் - பெண் என்ற பேச்சுக்கே இடமில்லாது ஆளுமை என்ற குணாம்சம் தேடப்படும்.

# அரசியலில் இஸ்லாமியப் பெண்களின் பிரவேசம்

இலங்கை அரசியல் வரலாற்றில் முதன்முதலாக பேரியல் அஷ்ரப் என்ற ஒரு முஸ்லிம் பெண் அரசியல் கட்சியொன்றின் தலைவியாகிறார். தென்னாசிய அரசியலில் இருந்துவரும் மரபுப்படி கணவரின் மறைவினால் அவரது அரசியல் பிரவேசம் இருந்தாலும் கணவரது அகால மரணத்தினால் கிழக்கிலங்கையில் எழுந்த அனுதாப அலைகளைப் பயன்படுத்தும் நோக்கத்தோடு தலைமைப் பதவியில் அமர்த்தப்பட்டார் என்று கூறினாலும், அவரது அரசியல் பிரவேசம் மகிவும் முக்கியம் வாய்ந்ததொன்று. 5000 வேட்பாளர்களில் ஆக 150 பெண் வேட்பாளர்களே போட்டியிடுகின்ற அந்த வெட்கக்கேடான தேர்தலில் ஒரு முஸ்லிம் பெண் ஒரு கட்சியின் தலைவியாகத் தேர்தலில் போட்டியிடுவது வரவேற்க வேண்டிய விடயம். பொ.ஐ.மு. ஆக 15 பெண்களையே வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளது. ஐ.தே.க 11பெண்களையும், மக்கள் விடுதலை முன்னணி ஆகக்கூடிய தொகையாக 22 பெண்களையும் சிஹல உருமய 8 பெண்களையும் வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளன. ஐ.தே.க. தனது தேசியப்பட்டியலில் பெண்களுக்கு இடம் தரவில்லை. பொ.ஐ.மு. பிரபல கல்வியாளாரும் பெண்கள் நலனுக்காகப் பாடுபடுபவருமான ஜெசிமா இஸ்மாயில் உட்பட மூன்று பெண்களுக்கு இடமளித்துள்ளது.

கலாசார ரீதியான அறிகுறிகள்

பேரியல் அஷ்ரப் கட்சித் தலைவியாக நியமிக்கப்பட்டமை கலாசார ரீதியான சில அறிகுறிகளையும் காட்டுகிறது. பெண்களைப் பர்தாவிற்குப் பின்னேயே வைத்திருக்க விரும்பும் சமூகம் பேரியல் அஷ்ரப்பைக் கட்சித் தலைவியாக ஏற்பதன் மூலம் முஸ்லிம் பெண்களை அரசியலில் ஏற்றுக் கொள்கிறது என்பதைக் காட்டுகிறது. இவர் பெண்ணாக இருப்பதால் இவரது அரசியல் பிரவேசத்தையிட்டுச் சில பகுதிகளில் எதிர்ப்பும் இருந்தது. தற்போது அவர் தமது சமய ஆசாரப்படி மறைந்த கணவருக்காகத் தனிமை நோன்பில் இருப்பதால் அவருக்காக அவருடைய மகன் தேர்தல் பிரசாரம் செய்கிறார். தற்போது அவர் பொதுமேடைகளில் தோன்றாதபடியால் தேர்தலின் பின்பும் தோன்றமாட்டார் என்பதல்ல. தேர்தல் முடிவுகள் எப்படியிருப்பினும் பேரியல் அஷ்ரப கட்சித்தலைவியாக ஏற்கப்பட்டது முஸ்லிம் பெண்களின் அரசியல் பிரவேசத்திற்கு ஒரு முன்னறிவிப்பு போல இருக்கிறது. அமைச்சர் M.H.M. அஷ்ரப் அவர்களின் துயரமிக்க திடீர் மறைவும் அவரது துணைவியார் பேரியலின் திடீர் அரசியல் பிரவேசமும் பலவாதப் பிரதிவாதங்களைக் கிளப்பியதோடு இதுவரை காலமும் அறியப்படாதிருந்த பேரியல் அஷ்ரப்பை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து விட்டது. அரசியலில் ஈடுபட்டுள்ளவர்களால் அவர் அறியப்படாதவரல்ல. அவர் தமது கணவரின் அந்தரங்க செயலாளராகப் பணிபுரிந்தமையால் அவெர் அரசியலில் ஒருவகையில் ஈடுபட்டுத்தான் இருந்தார்.

பேரியல் கம்பளையில் பிறந்தவர். நாட்டுக்குப்பல முஸ்லிம் தலைவர்களைத் தந்த கம்பளை ஸாகிராக் கல்லூரியில் கல்வி கற்றவர். தமது மாணவப் பருவத்திலே கல்லூரியின் மாணவத்தலைவியாக விளங்கியிருக்கிறார். அவர் பதிவு செய்யப்பட்ட மருத்துவராவதற்குப் படித்துக் கொண்டிருந்த போது அஷ்ரப் அவர்களைத் திருமணஞ் செய்தார். அவர் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் சிறந்த அறிவும் ஆற்றலும் உடையவர். ஒரு கட்சித் தலைவியாகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் சிறந்த முறையில் பணியாற்ற இது உதவும்.

ஜெசீமா இஸ்மாயில்

ஒரு கட்சித் தலைவியாகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றக்கூடிய பேரியலைத்தவிர இன்னுமொரு முஸ்லிம் பெண்ணும் பாராளுமன்றத்துக்கு வரக்கூடும். அவர்தான் கிழக்கிலங்கையைச் சேர்ந்த ஜெசிமா இஸ்மாயில். இவரது பெயர் தேசியப்பட்டியலில் காணப்படுகிறது. இவர் சகல சமூகத்தையும் சேர்ந்த பெண்களின் நலன்களுக்காகப் பல ஆண்டுகளாகப் பாடுபட்டு வருகிறார். ஜெசிமா அவர்கள் கொழும்பு புனித பிரிஜெட் கல்லூரியில் கல்வி கற்றுப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்.

பல ஆண்டுகளாக ஆசிரியப்பணி புரிந்திருக்கிறார். தேவிபாலிகா கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்து, பின்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியின் அதிபரானார். அதிபராக இருந்த காலத்தில் பெண் பிள்ளைகளுக்குத் தலைமைத்துவப் பயிற்சியளிப்பதில் அதிக ஈடுபாடு காட்டினார். அரசியலில் ஈடுபட்டுள்ள இவருக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டால் பாராளுமன்றத்தில் சிறந்த பிரதிநிதியாக விளங்குவார்.

இவர் பெண்களுடைய பிரச்சினைகளில் மட்டுமன்றி தேசிய நலன் பற்றிய விடயங்களிலும் அதிக அக்கறை காட்டுபவர். ஜெசீமா பெண்களுக்கான தேசிய குழுவில் அங்கத்தவராகப் பணியாற்றினார். அத்துடன் பெண்களது உரிமைகளுக்காக மிகத் துணிச்சலுடன் போராடினாார்.

ஆயிஷா ரவூப்

அரசியலில் அக்கறை காட்டுகின்ற இரண்டு முஸ்லிம் பெண்கள் பற்றி முன்பு விபரித்தோம்.

இவர்களுக்குச் சிறந்த முன்னோடியாக விளங்கியவர் ஆயிஷா ரவூப் அவர்கள் (1917-1992) ஆயிஷா பீபி கேரளாவில் பிறந்தவர். இவருடைய தந்தையார் இந்திய தேசிய காங்கிரசில் ஒரு முக்கிய புள்ளி. அவர் பெண்பிள்ளைகளுக்கும் ஆண்பிள்ளைகளுக்கும் கல்வியில் சம சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டு மெனக் கருதினார். ஆயிஷா தெலிச்சேரி திரு. இருதயக் கன்னியர் மடத்திலும் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் கல்வி கற்றார். அக்காலத்தில் இருந்த மிகச் சில பெண் பட்டதாரிகளில் ஒருவராக ஆயிஷா இருந்தார். முஸ்லிம் கல்விக்கான விசேட உத்தியோகத்தராக ஆயிஷா நியமனம் பெற்றார். அக்காலத்தில் முஸ்லிம் பெண்களின் கல்வி மேம்பாட்டுக்காக அவர் பல பாடசாலைகளை ஆரம்பித்தார். 1944ம் ஆண்டில் இலங்கையைச் சேர்ந்த M.S.M. ரவூப் இற்கும் ஆயிஷாவிற்கும் திருமணமாயிற்று. இலங்கைக்கு வந்தபின் சேர்.ராசீக் பரீத் அவர்கள் முஸ்லிம் பெண்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் படி ஆயிஷாவைத் தூண்டினார்.

இரண்டு அரிய சாதனைகளுக்காக அவர் போற்றப்படுகிறார். கொழும்பில் முஸ்லிம் பெண்கள் கல்லூரியின் முன்னோடியாகவும் அதிபராகவும் கல்வித்துறையில் சாதனை புரிந்தார். அரசியல் துறையில் ஈடுபட்டுக் கொழும்பு மாநகரசபையில் அங்கத்தவராக விளங்கினார். பெண்களின் உரிமைகளுக்காகப் போராடினார். பொது வாழ்வில் முஸ்லிம் பெண்களுக்கும் ஏனைய பெண்களுக்கும் இடமளிக்காததை அவர் எதிர்த்தார். ஒரு கல்வியாளராகவும் அரசியல்வாதியாகவும் பெண்களின் முன்னேற்றத்தில் அவர் அதிக அக்கறை காட்டினார். போருக்குப் பிந்திய காலத்தில் போதிய ஆசிரியர்களின்றி நலிந்திருந்த முஸ்லிம் மகளிர் கல்லூரியை மிகச் சிறந்த புகழ்வாய்ந்த கல்லூரியாக விளங்கச் செய்தார்.

இலங்கைக்கு வந்து மூன்று ஆண்டுகளே ஆனபோது 1947ம் ஆண்டில் கொழும்பு மத்திய தொகுதியில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். அவர் திரு. ஏ.ஈ. குணசிங்க, ரி.பி.ஜயா, திரு.பீற்றர் கெனமன், எம்.ஏ.எம்.முனாஸ் ஆகியோருடன் போட்டியிட்டார். முஸ்லிம்களின் வாக்குகள் பிரிக்கப்பட்டதனால் ஆயிஷா தோல்வியுற்றார். தோல்வியுற்றபோதிலும் அது அவரது ஆர்வத்தை மேலும் தூண்டியதால் அவர் மாநகரசபைத் தேர்தலில் புறக்கோட்டைப் பகுதியில் போட்டியிட்டு வென்றார். 1952ம் ஆண்டில் அவர் கொழும்பு மாநகரசபையின் உதவி மேயரானார். அவா 1961ம் ஆண்டுவரை மாநகரசபை அரசியலில் அக்கறை காட்டி வந்தார். சேரிகளை ஒழித்தல், சிறுவர் பூங்காக்களை அமைத்தல், உணவுப் பண்டங்கள் சுத்தமாக வழங்கல், சுகாதார வசதிகளை அமைத்தல் போன்றவற்றில் அதிக அக்கறை காட்டினார். அத்துடன் பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான தனது பொறுப்பையும் அவர் தவறவிடவில்லை. பெண்களின் கல்வி, சீதன ஒழிப்பு, சமவேலைக்குச் சமசம்பளம் என்பற்றுடன் குழந்தைகள் காப்பகங்கள் அமைத்தல் என்பவற்றில் ஊக்கமுடன் செயற்பட்டார். முஸ்லிம் பெண்கள் கல்லூரி அரசாங்க பாடசாலையாக்கப்பட்டதும் அவர் அரசாங்க ஊழியர் ஆனமையால் தனது அரசியல் செயற்பாட்டிலிருந்து விலகிக் கல்வித்துறைக்காக 1977ம் ஆண்டுவரை அரும்பணியாற்றினார். ஐந்து ஆண்டுகள் சம்பியா நாட்டிற்குச் சென்று கல்விப்பணி ஆற்றியபின் நாடு திரும்பியபோது அவரது பெயர் தேர்தல் வாக்காளர் இடாப்பில் இடம் பெறாமையால் அவரால் தேர்தலில் போட்டியிட முடியவில்லை. 1990ம் ஆண்டு அவருக்கு இரண்டாம் பிரிவு தேசபந்து என்ற பட்டம் வழங்கப்பட்டது. அவர் கல்வித்துறையிலும் அரசியற்றுறையிலும் ஆற்றிய பணிக்காக இக் கௌரவம் அவருக்கு வழங்கப்பட்டது. அவர் 1992ம் ஆண்டு காலமானார்.

## வெளிநாட்டவரின் பங்களிப்பு

உலகில் பல முஸ்லிம் பெண்கள் அரசியல் கட்சிகளின் தலைவிகளாக இன்று இருக்கிறார்கள். துருக்கியில் அரசியற்கட்சித் தலைவிகளாக பிரதமராகப் பெண்கள் இருந்திருக்கிறார்கள். சில நாடுகளில் இன்னும் இருக்கிறார்கள். பாத்திமா மேமிசி என்ற சமூகவியலாளர்; ஆரம்பகாலத்தில் பெண்கள் சுல்தான்களாக இருந்திருக்கிறார்கள் என்றும் அவர்கள் உரிமையுடன் நாட்டை ஆண்டார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆயிஷா ரவூப் வெளியில் இருந்து வந்தவர். அவர் கல்வியிற் சிறந்த கேரள பிரதேசத்திலிருந்து வந்தவர். அவரது குடும்பம் அரசியல் ஈடுபாடுள்ளது. எனவே அத்தகைய பின்னணியிலிருந்து வந்த ஒருவருக்குச் ஸ்ரீலங்காவில் அரசியலில் ஈடுபடுவது அவ்வளவு கஷ்டமாக இருக்கவில்லை. எகிப்திலிருந்து 19ம் நூற்றாண்டில் நாடு கடத்தப்பட்ட ஔரபி பாஷாவைப்போல அவரும் மாற்றம் வேண்டும் எனக் கருதியவர். அதனால் உள்ளூர் முஸ்லிம் சமுதாயத்தில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு உற்சாகம் கொடுக்க முடிந்தது.

ஆனால் இன்று நமது நாட்டில் உள்ள முஸ்லிம்கள் வெளிநாட்டவர்களைத் தமக்காக உழைக்க வேண்டுமென எதிர்பார்க்கத் தேவையில்லை. முஸ்லிம் சமூகம் தமக்காக உழைப்பதற்குப் புத்தி ஜீவிகளான பெண்களையும் ஆண்களையும் உருவாக்கியுள்ளது. இவர்கள் வெளிநாட்டிலிருந்து இங்குவந்து உழைத்த முன்னோடிகள் ஆரம்பித்து வைத்த பணிகளைத் தொடர்வார்கள்.

''த ஐலண்ட்'' 4-10-2000
(நன்றி : 3வது கண்)

# இலங்கை அரசியலில் முஸ்லிம் பெண்கள்


- சஹ்றானியா தைப்தீன்

1931ம் ஆண்டு யாப்பின் மூலம் அனைவருக்கும் வாக்குரிமை என்ற அம்சத்தினூடாக முதன் முதலில் இலங்கை அரசியல் நீரோட்டத்தில் பெண்கள் இணையும் வாய்ப்பு ஏற்பட்டது. இது இலங்கை பெண்களின் அரசியல் வரலாற்றில் முதற் கட்டமாகும். ஏனைய நாடுகளில் குறிப்பாக வளர்ச்சியடைந்த மேற்கத்தேய நாடுகளில் கூட பெண்கள் வாக்குரிமை வேண்டி போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் இலங்கையில் அந்நிலை இல்லாது சர்வசன வாக்குரிமையினூடாக பெண்களுக்கு அரசியலில் சம வாய்ப்பு வழங்கப்பட்டது.

தொடர்ந்து வந்த காலங்களில் பெண்கள் தேர்தலில் போட்டியிட்டு சட்டசபைக்கு தெரிவாகும் நிலை காணப்பட்டது. குறிப்பாக இலங்கையில் பெண்களின் அரசியல் பிரவேசம் என்பது பெரும்பாலும் குடும்ப செல்வாக்கின் காரணமாகவே இடம் பெற்று வருகின்றது. இவ்வகையில் தந்தை அல்லது கணவன் அல்லது சகோதரன் அரசியலில் அதிகாரத்தை இழக்கும் போது அதனை நிவர்த்தி செய்யும் முகமாகவே பெண்கள் அரசியலில் நுழைகின்றனர்.

இலங்கை முஸ்லிம் பெண்களில் முதலாவதாகக் தேர்தலில் போட்டியிட்டவர் என்ற பெருமை திருமதி. ஆயிஷா ரவூப் அவர்களையே சாரும். முதன் முதலாக இவர் 1977ம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலில் கொழும்பு மத்திய பிரதேசத்திலிருந்து சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்டு 8486 வாக்குகளை பெற்ற போதிலும் அவரால் வெற்றி பெற முடியவில்லை. 1947ல் மீண்டும் ஆயிஷா ரவூப் அவர்கள் கொழும்பு மாநகர சபைக்கு தெரிவு செய்யப்பட்டதோடு தொடர்ந்தும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டது மட்டுமல்லாது 1954களில் கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயராகவும் தெரிவானார். முஸ்லிம் பெண்களின் அரசியல் பிரவேசத்தின் முன்னோடியாக திருமதி. ஆயிஷா ரவூப் அவர்களை குறிப்பிடலாம்.

தொடர்ந்து வந்த காலங்களில் இலங்கை அரசியலில் முஸ்லிம் பெண்களின் பங்களிப்பு மிக குறைவாகவே காணப்பட்டது. இலங்கையை பொறுத்த வரையில் பெண்களின்அரசியல் பங்களிப்பு என்பது அவர்களது விகிதத்திற்கு ஏற்ப இடம் பெறுவதில்லை எண்ணிக்கையளவில் மிகவும் குறைவான விகிதத்தையுடைய பெண்களே அரசியலில் ஈடுபடுகின்றனர். அவ்வகையில் 2000 ஒக்டோபரில் இடம் பெற்ற பொதுத் தேர்தல் இலங்கை முஸ்லிம் பெண்களின் அரசியல் பங்களிப்பின் முக்கிய திருப்பு



முனையாக அமைந்தது. முதல் முஸ்லிம் பெண் பாராளுமன்ற உறுப்பினராக திருமதி அன்ஜான் உம்மா அவர்களும் முதல் முஸ்லிம் பெண் அமைச்சராக திருமதி அஷ்ரப் அவர்களும் தெரிவாகினார்.

திருமதி அஷ்ரப் அவர்கள் கணவனின் மறைவினால் ஏற்பட்ட அனுதாப வாக்குகளாலும், குடும்ப பின்னணியி னூடாகவும் அரசியலில் நுழைந்தவராவார். ஆனால் திருமதி அன்ஜான் உம்மா ஏற்கனவே உள்ளூராட்சி சபையில் அங்கம் வகித்தவர் இருந்தும் இவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி பற்றி பலவாறு விமர்சிக்கப்படுகின்றது.

இலங்கை அரசியல் வரலாற்றில் முஸ்லிம் பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாகக் காணப்பட காரணம் இஸ்லாமிய மதத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் மத ரீதியான கட்டுப்பாடாகும். இஸ்லாமிய சட்டத்தில் நாட்டு நிர்வாக விடயங்களில் பங்கு பற்றும் உரிமை ஆண்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது இதுவே ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். அதனால் தான் முஸ்லிம் பெண்களின் அரசியல் பிரவேசத்திற்கு எதிரான அலைகள் முஸ்லிம்களிடையே பரவலாக காணப்படுகின்றது. முஸ்லிம் பெண்கள் அதிகாரத்தினூடாகவே குடும்ப பின்னணியினூடாகவே அரசியலில் பங்கு பற்றினாலும் பெரியளவில் அவர்கள் பிரகாசிக்காமைக்கான காரணம் இதுவேயாகும். இஸ்லாமிய நோக்கில் ஆராய்ந்தால் இதற்கான காரணங்களை மேலும் ஆழமாக நோக்கலாம்.

எனவே இறுதியாக நோக்கின் இலங்கை அரசியல் வரலாற்றில் முஸ்லிம் பெண்கள் குறைந்தளவு பங்குபற்றுதல் அல்லது பங்குபற்றாமல் இருத்தல் போன்றவற்றிற்கு அவர்களது மத ரீதியான கொள்கைகளும் பரம்பரையாக பின்பற்றி வரும் மத அனுஷ்டானங்களுமே காரணமாகும் என்றால் அது மறுக்க முடியாத உண்மையே ஆகும்.

● ● ●

பெண்ணும் ஆணும் தரே தடத்தில் ஓடும் இரு ஓட்டப் பந்தயக்காரர்கள். ஆண் சுதந்திரமாகவே ஓடுகின்றான். பெண் ஒரு கையில் குழந்தையையும் மறுகையில் சமயலறைப் பாத்திரங்களையும் சமன் செய்து கொண்டு ஓடுகின்றாள். சுமைகளுடனான பெண் ஆணின் வேகமளவிற்கு ஓடினும் மக்கள், பெண்கள் நளினமாக ஓடவில்லை எனக்குறை கூறுகின்றனர். இது ஏனென்று தான் விளங்கவில்லை.

- Zhang Guoying

(சீனப் பெண்களமைப்பு)

**நேர்காணல்**



# திருமதி ரெங்கநாயகி பத்மநாதன்

திருமதி ரெங்கநாயகி பத்மநாதன் 1980 முதல் 1988 வரை பட்டிருப்புத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராகவும், மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராகவும் பணியாற்றி அப்பகுதியின் அபிவிருத்திக்காக அரிய பணிகளை ஆற்றியவர். பாராளுமன்றத்தில் அங்கத்தவராக பதவி வகித்த முதலாவது தமிழ்ப்பெண் என்ற பெருமையைக் கொண்டவர். அரசியல் பற்றிய அவரின் அனுபவங்களையும், அபிப்பிராயங்களையும் இங்கு வாசகர்களுடன் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சிகொள்ளுகிறோம்.

நேர்கண்டவர் : திருமதி பத்மா சோமகாந்தன்.

கேள்வி : சமுதாயத்தில் பாதித் தொகையினர் பெண்கள். இலங்கையில் பெண்களுக்கு வாக்குரிமையுமுண்டு. அப்படியிருந்தும் கணிசமான எண்ணிக்கை யான பெண்கள் அரசியலில் ஈடுபடாமல் இருக்கும் காரணம் என்ன?

பதில் : இலங்கை சுதந்திர மடைந்து ஐந்து தசாப்தங்கள் உருண்டோடி விட்டன. முன்னர் பெண்கள் வேறு தறைகளில் விழிப்புணர்ச்சியுடையவர்களாக இருந்தபோதிலும், இலங்கையில் பெண்கள் சனத்தொகை விகிதாசாரத்தின்படி அரசியலில் ஈடுபடவில்லை என்பது உண்மையே. தென் கிழக்காசியாவில் குறிப்பாக இலங்கை இந்தியா போன்ற நாடுகளின் பண்பாடு, கலாச்சாரக் கோட்பாடுகள் போன்றவை பெண்களின் அரசியல் ஈடுபாட்டுக்குத் தடையாக அமைந்திருந்ததை ஒரு காரணமாகக் கொள்ளலாம். அடுத்ததாக அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடுகளில் அக்காலகட்டத்தில் மக்களிடையே சுதந்திர உணர்ச்சி ஊற்றெடுத்தது. அந்நியனை வெளியேற்றி நாட்டில் சுதேசிகளின் ஆட்சியை உருவாக்குவதற்குப் பலவேறுவிதமான போராட்டங்களில் ஈடுபடவேண்டிய கட்டாய நிலையேற்பட்டது. இத்தகைய போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களில் பெண்கள் பங்குபற்றக் கூடிய ஒரு சூழ்நிலை அக்கால கட்டத்தில் ஏற்புடையதாக அமையவில்லை. அதனால் ஆண்களே அப்போராட்டத்தில் மும்முரமாக ஈடுபட்டனர். சுதந்திரம் கிடைத்தபின்பு பெண்களின் அரசியல் பிரவேசம் மிகவும் மெதுவாக, கால தாமதமாகவே அமைந்தது எனலாம்.

கேள்வி : எமது நாட்டைப் பொறுத்த ளவில் சிங்களப் பெண்கள் ஓரளவாவது அரசியலில் ஈடுபடுகின்றனர். ஆனால் தமிழ்ப் பெண்கள் அவ்வாறு முன்வரவில்லையே. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில் : நான் முன்பு கூறியபடி மற்ற வர்களிலும் பார்க்கக் குறிப்பாகத் தமிழ்ப் பெண்களிடையே பண்பாட்டுக் கலாச்சாரக்

கோட்பாடுகள் தீவிரமாக வேரூன்றி இருந்தமையைக் குறிப்பிடலாம். ஆனால் தமிழ்ப்பெண்களின் அரசியல் பிரவேசதிற்கு அதிமுக்கிய காரணத்தை நாம் இனங்காண முயல வேண்டும். இலங்கை அந்நியர் ஆட்சியிலிருந்து விடுபட்டுப் பூரண சுதந்திரம் பெறுவதற்கு சேர். பொன். இராமநாதன் போன்ற தலைவர்கள் ஆற்றிய பங்களிப்பு மிகச் சிறப்பாக அமைந்திருந்த போதிலும் சுதந்திர இலங்கையில் சிறுபான்மை இன மக்கள் பெரும்பான்மை மக்களைப் போன்று கிடைத்த சுதந்திரத்தை அனுபவிக்க முடியாத ஓர் அவலமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். மீண்டும் சிறுபான்மை இனத்தின் உரிமைப் போராட்டம் உருவெடுத்தது. முழு இலங்கைப் பெண்ணினம் முன்னைய போராட்டங்களில் இருந்து ஒதுங்கியிருந்தது போன்ற ஒரு நிலை சுதந்திரத்தின் பின் தமிழ்ப் பெண்களுக்கானது. எனவே இத்தகைய எதிர்ப்புப் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களில் எம் பெண்கள் நேரடியாகப் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டது. ஆனாலும் உரிமைப் போரில் ஈடுபட்ட தலைவர்களுக்கு ஓர் உந்து சக்தியாக அவர்களின் பின்னணியில் பல தமிழ்ப் பெண்கள் கருமமாற்றினர். இந்த வரிசையில் மங்கையற்கரசி அமிர்தலிங்கம், சரோஜினி யோகேஸ்வரன் போன்றவர்கள் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்காவிட்டாலுங் கூட அரசியலில் பாரிய பங்காளர்களாக இருந்தார்கள். இலங்கையில் சுதந்திர பாராளுமன்றம் அமைய முன்பு ஆங்கில ஆட்சியின் கீழிருந்த சட்டசபையில் (State Council) நேசம் சரவணமுத்து என்ற தமிழ் பெண்மணி அங்கம் வகித்தார் என்பது பெருமைக்குரிய விடயம்.

இன்னும் ஒரு காரணத்தை நாம் கருத்திற் கொள்ளலாம். பெரும்பான்மை இன அரசியல் ஈடுபாடு செயலமர்வுகள் போன்றவை அமைதியான ஒரு சூழ்நிலையில் தங்கு தடையின்றி இடம் பெற வாய்ப்பு இருந்தமையால் பெரும்பான்மையினக் கட்சிகள் பெண்களைத் தங்கள் கட்சி அங்கத்தவர்களாகப் பாராளுமன்றம் சென்று நேரடியாகவே அரசியலில் ஈடுபட வைத்தன. இந்த வகையிலேயே பாராளுமன்ற அங்கத்தவர்களாக இருந்த இரு பெண்களும் ஐக்கிய தேசியக்கட்சிப் பட்டியலில் அங்கம் வகித்தவர்களாக இருந்தனர். ஆனால் முடிவில்லாத அல்லல் நிறைந்த அரசியலில் போரட்ட நிரோட்டத்தில் எதிர் நீச்சல் போட வேண்டிய கால கட்டத்தில் பாதுகாப்புப் போன்ற பல காரணங்களால் தமிழ்க் கட்சிகள் வெளிப்படையாகத் தமிழ் பெண்களைத் தங்களுடன் இணைத்து அரசியலில் ஈடுபடுத்தத் தயங்கின.

கேள்வி : நீங்கள் அரசியலுக்கு எவ்வாறு வந்தீர்கள். அதில் ஏற்பட்ட சில அனுபவங்களைக் கூறுங்கள்.

பதில் : கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தின் பாராளுமன்றப் பிரதிநிதியாக எனது சகோதரர் இருந்த காலத்தில் அவரின் அந்தரங்க செயலாளராகக் கடமையாற்றினேன். அவரின் மறைவுக்குப்பின் ஐக்கிய தேசியக் கட்சி அவரின் வெற்றிடத்திற்கு என்னைத் தெரிவுசெய்து ஒரு முதல் தமிழ்ப் பெண்மணியைப் பாராளுமன்றத்தில் அமர்த்திச் சரித்திரம் படைத்தது. இந்த நியமனத்தால் சுதந்திர இலங்கையில் தமிழ்பெண்களின் அரசியல் பிரவேசத்திற்கு எனது நியமனம் முதல் மைல் கல்லாக அமைந்தது என்று கூற வேண்டும்.

அடுத்து அம்பாறை மாவட்டப் பொத்துவில் தொகுதியின் பொறுப்பு எனக்களிக்கப்பட்டதை நான் பெரும் வாய்ப்பாக கருதினேன். ஏனெனில் எனது சகோதரரின் செயலாளராக நான் கடமையாற்றிய காலத்தில் இருந்தே அப்பகுதியில் வாழும் மக்களின் பிரச்சனைகள், தேவைகள் அவற்றின் நிவர்த்திக்கு எம்மால் ஆற்றக்கூடியவை என்பவற்றை தெரிந்தும் உணர்ந்தும் இருந்தேன். எனது சகோதரருக்கு மறைவு ஒரு சவாலாக இருந்தது. எனது சகோதரருக்கு நான் கொடுத்த ஒத்துழைப்பு அவரின் பின் என்னைத் தங்கள் பிரதிநிதியாக மக்கள் ஏற்றுக் கொண்டு தங்கள் முழு ஆதரவையும் எனக்கு தந்துதவினர். நானும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உயர்ந்த சமூகப் பணிக்கு என்னை அர்ப்பணித்துத் தீவிரமாக எனது பணியில் இறங்கினேன். எனது சிந்தனை முழுக்க முழுக்க மக்களின் முன்னேற்றத்திலும், கிராம அபிவிருத்தியிலுமே சென்றது. நேர்மையாகவும், முறையாகவும் எனது ஆதிக்கத்திற்குட்பட்ட கருமங்களை நிறைவேற்றும் ஒழுங்கினை நான் கடைப்பிடித்தமையால் எனது எட்டு ஆண்டு காலப்பகுதியில் அதுவும் அரசியல் எதிரப்புக்காலக்கட்டதில் எவ்விதமான எதிர்ப்பையும் நான் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படவில்லை.

அடுத்து எனது தொகுதியில் விஷமிகளால் தூண்டி விடப்பட்ட இனக்கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட தமிழ்க்கிராம மக்கள் படும் இன்னலைக் கேட்டறிந்த பின் அவர்களை நேரிலே சென்று பார்த்தது ஆவன செய்ய வேண்டுமென்ற ஓர்

அவா என்னுள் எழுந்தது. அரசாங்க அதிபரை அணுகியபோது அவ்விடத்துப் பாதுகாப்பற்ற சூழலைக் காரணங் காட்டித் தான் வர மறுத்ததோடு என்னையும் தடுத்தார். ஆனால் எனது பணியின் உத்வேகம் பாதுகாப்பு, பயம் என்பவற்றை ஓரங்கட்டச் செய்தது. எனது மெய்ப்பாதுகாவலருடன் அப்பகுதி நோக்கிச் சென்றேன். வீதிகளில் ஜன நடமாட்டமின்றி எங்கும் ஒரே சூன்யப் பிரதேசமாகக் காணப்பட்டது. வண்டியின் ஓசை கேட்டுத் தங்கள் வீட்டு வேலிகளுக்குள் நின்று என்னைக் கண்ட மக்களின் 'அம்மா, அம்மா' என்ற அவலக்குரல் இன்றும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு பிரமை. காவலரின் வேண்டுகோளுக் கிணங்கிக் குறிப்பிட்ட சில இடங்களில் மாத்திரமே வண்டி நிறுத்தப்பட்டது. கலவரத்தில் மரணித்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்யவோ மரணச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளவோ முடியாத நிலையை அங்கு நின்ற மக்கள் சுட்டிக்காட்டினர். கடவுளின் கருணை கிட்டியது போலும். நான் அங்கு செல்கிறேன் என்பதை அறிந்த அரசாங்க அதிபர் என்னைப் பின் தொடர்ந்து வந்து என்னருகில் நின்றார். உடனேயே அவரின் உதவியுடன் அவர்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய ஆவன செய்து, அவர்களுக்கு ஆறுதல் கூறி அவர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிப்பதாக உறுதி கூறி அவ்விடத்திலிருந்து திரும்பினேன். ஏதோ என்னாலானதைச் செய்து விட்டேன் என்ற திருப்தி என்னை நிறைத்தது.

அரசியலில் ஈடுபடுவோர் அவர்கள் பெண்களாக இருந்தாலும் இப்படியான சூழ்நிலைகளை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் என்பதை ஆணித்தரமாகக் கூறிவைக்க விரும்புகிறேன்.

இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். எனது தொகுதியில் உள்ள கஞ்சிக்குடியாறு என்ற பிரதேசத்தில் இரண்டாயிரம் ஏக்கர் நிலப்பரப்பினை விவசாயத்திற்குப் பயன்படுத்தக் கூடிய ஒரு நீர்ப்பாசனத்திட்டத்திற்கு எனது முயற்சியால் அரசாங்கம் அறுபது லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியது. அது ஒரு நான்காண்டுத் திட்டம். எங்கள் இனத்தின் சாபக் கேடுகளில் ஒன்று. தட்டிக்கேட்க ஆளில்லாவிடில் எதுவும் செய்யலாம் என்று எண்ணுகின்ற கூட்டம் எம்மிடையே இருப்பது தான். முதலாவது ஆண்டுக்குரிய பணம் கொடுபட்டு வேலை ஆரம்பமானது. முதலாண்டு முடிந்தும் வேலை ஆரம்பிக்கவில்லை. பணமும் எங்கோ பறந்து விட்டது. அப்பகுதி விவசாயிகள் முறைப்பாட்டை ஏற்று அங்கு செல்லத் தீர்மானித்தேன். ஆனால் நீர்ப்பாசன அதிகாரிகள் ஒரு பெண்ணால் அப்பகுதிக்குச் செல்ல முடியாது என்று காரணங்காட்டி என்னுடன் வரமறுத்து விட்டனர். எனினும் நான் மக்களின் சொல்லுக்கு மதிப்புக் கொடுத்ததுடன் மக்களின் சேவைக்காக ஒதுக்கப்பட்ட பணம் எந்தளவில் அத்தேவையை நிறைவேற்ற ஆரம்பித்துள்ளது என்பதையும் அறியும் நோக்குடன் அதே மக்களின் துணையுடன் அப்பகுதிக்குச் சென்றேன். அங்கு வெறுமனே மண்மேடுகளைத் தவிர எந்த வேலை செய்த அடையாளமும் காணப்படாததைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். அதற்கான நடவடிக்கையினை தொடர்ந்து மேற்கொண்டு அதனை நிறைவேற்றினேன்.

கேள்வி : ஒரு பெண் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு எவ்வாறான சாதனைகளை உங்களால் ஆற்ற முடிந்தது?

பதில் : மக்களைப் பிரதிநிதிப் படுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்கள், தமது குறைநிறைகள் மக்கள் சேவையை பாதிக்க விடுவது முறை அல்ல. நான் ஒரு பெண் - இதனால் பின் வாங்க வேண்டிய கட்டங்கள் உருவாகலாம். குடும்பப் பொறுப்புக்கள் இடையூறாக வரலாம் என்னும் குழப்ப நிலைக்கும் உணர்ச்சிகளுக்கும் எம்மை அப்பால் படுத்துவதும், பெண்ணை சிறப்பிக்க கூடிய ஒரு ஆற்றல் என நான் கருதுகிறேன். எனது சேவையில் நான் கொண்ட ஊக்கமும் வேகமும் இந்த உணர்ச்சிகளுக்கு என்னை அடிமைப்படுத்த வில்லை. பெண்ணாக இருந்த நன்மைகள் பல. தொகுதி மக்களின் நன்மை தீமைகளை தாயுள்ளத்துடன் பரிசீலிப்பது, குடும்பத்தை பராமரிப்பதுபோல் தொகுதியை பெரியதொரு குடும்பமாக கண்காணிப்பது, இப்படியான உணர்ச்சிகள் இயற்கையாக ஊறின- கடமைக்காக வரவழைக்க வேண்டியதில்லை.

எனது பிரதிநிதித்துவ தொகுதி, பரந்துபட்டு மக்கள் வாழும் பாரிய நிலப்பரப்பு உள்ளது. இங்கு பிரயாணங்களில் கூட, விலங்குகள் காட்டு யானைகளையும் எதிர்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்கள் இருந்தன. லாகுனை காட்டு யானை சரணாலயம், குமுனை பறவைகள் சரணாலயம் போன்றவை எனது தொகுதிக்குட்பட்டன. 1981ம் ஆண்டு நான் நியமனம் பெற்ற பொழுது முன் கூறியபடி, தொகுதி அபிவிருத்திப்பணி மலைபோல் தோன்றியது. ஒரு பிரதிநிதிக்கு அரசாங்கம் பங்கீடு செய்யும். பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு தொகுதி அபிவிருத்தியை

நிறைவேற்றக்கூடியதாக இருக்க முடியாது. எமது நாடு பின் தங்கிய நாடு. அபிவிருத்தி அடைந்த நாடுகள் மக்களுக்கு ஆற்றும் சௌகரியங்களை அபிவிருத்தி அடைந்து கொண்டு வரும் மூன்றாவது உலக நாடாகிய இலங்கை அரசாங்கம் மக்களுக்கு பூரண திருப்தி அளிக்கும் வயையில் செய்ய முடியாது. எமது திறைச்சேரியின் சோகக் கதைகளை நாம் செவி மடுத்து மத்திய அரசாங்கம் வருடாந்தம் பகிர்ந்து அளிக்கும் தொகுதிகளுக்குரிய நிதிப்பங்கை ஒவ்வொரு பிரதிநிதியும் முறையாக மக்களின் தேவைகளையம் அபிவிருத்தி பணிகளையும் பரிசீலித்து, அத்தியாவசியத் தேவைகட்கு முதலிடம் கொடுத்து செயலாற்ற வேண்டியது மிகமிக அவசியம். பல மட்டங்களில்மக்கள் குழுக்கள் அமைத்து, அவர்கள் மூலம் குறிப்புகள் சேகரித்து முன்னுரிமை பட்டியல் உருவாக்குவதும் அதன்படி அபிவிருத்தி திட்டங்களை இனம் கண்டு பணம் ஒதுக்குவதும் மிகுந்த பலனைத் தரும். பாரபட்சம் இன்றி நிதிப்பிரிவிடல் செய்து பரவலாக அபிவிருத்தி செய்யலாம். மக்கள் சேவையை எவ்வாறு ஒழுங்காகவும் முறையாகவும் ஒப்பேற்றலாம் என்பதை நான் இங்கு விளக்க முயன்றேன். எமக்கு ஒதுக்கப்படும் நிதித்தொகையை கல்வி, விவசாயம், சுகாதாரம், நீர்ப்பாசனம், வீதி அமைத்தல் போன்ற பல துறைகளில் அபிவிருத்தி பணிக்கு பிரிவிடல் செய்து அதில் பலன் காண வேண்டிய கடமையும் பொறுப்பும், என்னைப் பொறுத்தளவில் எனது தலையாய கடமையாக ஏற்றுக் கொண்டு செயலாற்றினேன்.

இப்படியெல்லாமே நான் செயல் திட்டங்கள் வகுத்து, ஆரம்பித்த பொழுது, எனது தொகுதியின் முக்கிய குறைபாடு, என்னைப் பொறுத்தளவில்- பாரிய அதி முக்கிய குறைபாடு என் கண்கள் முன்னே மலை போல் தோற்றம் அளித்தது.

1947 ம் ஆண்டில் ஆரம்பித்த சுயஆட்சி அரசியல் சரித்திரத்தில், எனது தொகுதியில் தமிழ் மக்களின் கிராம எல்லைகளை கொண்ட, அரசாங்க அதிபர் காரியாலயம், நிறுவப்படவில்லை. ஒன்றாவது தமிழப்பகுதியில் இயங்கவில்லை. இந்நிலை பரத்தால் சமூகப் பிரச்சனைகளும், பொருளாதாரப்பிரச்சனைகளும் தமிழ்ச் சமுதாயத்திற்கு இருக்கச் செய்தது. பொருளாதாரப் பிரச்சனையை நோக்கின், தமிழ்க்கிராமங்களை ஒருங்கிணைத்து பிரதான காரியங்கள் அமைக்கப்பட்டால் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடும், தனியாகப் பெறலாம். மக்களும் ஊர் வேலைகளை தாமே நிர்ணயித்து சாதிக்க முடியும். இக் காரியாலயங்களில், தமிழ் மக்களுக்கு நியமனங்கள், வேலை வாய்ப்புக்கள் ஏதுவாகும். இந்த திட்டத்தின் பலா பலன்களை கருத்தில் கொண்டு, எனது முக்கிய பணி ஆரம்பம் ஆகியது. இதில் முதல் படி விபரங்கள் திரட்டுவது. புள்ளி விபரங்கள் சேகரிப்பதில் கூட, சில முட்டுக்கட்டைகள் இருந்தன. அதிகாரிகளிடம் அணுகும்பொழுது சகல விபரங்களும், நுணுக்கமாகவும் விரிவாகவும் அழுத்தப்படா விட்டால், ஏனோதானோ என்று முடிவுக்கு வந்து விடுவார்கள். எனது கோரிக்கையை வலுப்படுத்த அசைக்க முடியாத அத்தாட்சிகளும் தேவையாய் இருந்தது. ஒரு வகையில் எனது கோரிக்கையை பலப்படுத்திக்கொண்டு அமைச்சரிடம் விளக்கினேன். பல நாட்கள் ஆக அமைச்சு அதிகாரிகள் விவாதித்தும் எனக்கு பலன் கிட்டுவதாக தோன்றவில்லை. விடா முயற்சியாக பிரதமர் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றேன். எனது கட்சி சகபிரதிநிதிகளிடமே எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டி இருந்தது. நான் ஐக்கிய தேசியக் கட்சியால் நியமிக்கப்பட்டு இருந்தாலும் எத்தருணத்திலும் மக்களின் தேவைகளையும் நலன்களையும் பூர்த்தி செய்வதற்கு முதலிடம் கொடுத்தேன். ஆகவே நான் எதிர்ப்பை பொருட்படுத்தாமல் மனம் தளராமல் எனது கோரிக்கை, தமிழ் கிராமங்களுக்கு, முதுகு எலும்பை பலப்படுத்தும் ஒரு திட்டம், என வலியுறுத்தினேன்.

தமிழ் கட்சிகளின் தூண் ஆக, உள்ளூராட்சி அமைச்சராக இருந்த அமைச்சர் திருச்செல்வம் காலத்திலே, ஒரு நொடியில் ஆற்றக்கூடியதான திட்டம், காலம் கடந்து, 1982ம் ஆண்டிலே வாதங்கள் பிரதிவாதங்கள் மத்தியில், தமிழ்மக்களுக்கு கிடைத்தது. உதவி அரச அதிபர் காரியாலயம் 3 நிறுவப்பட்டன. திருக்கோவில் ஆலையடிவேம்பு, காரைதீவு என்னும் செயலகங்கள் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றின் மைல் கல் மட்டும் அல்ல அத்திவாரக் கல்லுமென்றே மதிப்பிட வேண்டும். உதவி அரசாங்க காரியாலயம் தற்பொழுது பிரதேச செயலகமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இங்கு காணப்பட வேண்டிய அரசியல் முக்கியத்துவம் என்னவெனில் நாடெங்கும் உள் ஆட்சியில் முதல் படியாக பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டன. பிரதேச செயலகம், இல்லாவிட்டால் ''பிரதேச சபை'' உருவாக முடியாத சட்ட நிபந்தனை. எனவே எனது விடாமுயற்சியால் அமைக்கப்பட்ட உதவி அரசாங்க பிரிவுகள், பிரதேச செயலகங்கள் சங்

தரம் உயர்ந்து, ஊராட்சியின் ஏணியில் முதல் படியான, ''பிரதேச சபைகள்'' திருக்கோவில் ஆலையடி வேம்பு என்னும் பிரதேச சபைகள் உருவாகின. ''ஆலையடி வேம்பு'' என்னும் கிராமத்தின் பெயரை அங்கு ஆலையடி பிள்ளையார் கோவில் அமைந்து இருந்ததால், நானே அப்பெயரை தெரிவு செய்தேன், புதிய காரியாலயம் ''ஆலையடி வேம்பு'' என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது. இங்கு நாம் காண வேண்டிய முக்கிய அம்சங்கள் - அதாவது, 35 வருடங்கள் தாமதப்பட்டு கிடைத்த காரியாலயங்கள் இதன் ஊடாக சட்ட நிபந்தனையின்படி அமைந்த தனித் தமிழ் ஊர் ஆட்சி நிர்வாகம் - அதவாது ஊர் ஆட்சி பிரதேச சபைகள் தேர்தல் தமிழ் பகுதியில் நடைபெறுகின்ற வாய்ப்புத் தமிழ் பிரதிநிதிகளைம் தமிழ் தலைவர் (Chairman)களையும் தெரிந்து எடுக்கும் வாய்ப்பு, தம் இன அதிகாரிகள் தனியாக ஒதுக்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு, தமிழ் பகுதிகளின் அபிவிருத்தி திட்டங்களை தாமே அமுல்படுத்தும் அதிகாரம், அடுக்கிக் கொண்டே போகக் கூடிய பாரிய பலா பலன்கள் தமிழ் மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படுத்தியது. எனது முயற்சி பயன் அளிக்காது இருந்தால் இற்றை வரைக்கும் உள்ளுர் ஆட்சியின் பங்கு, கிட்டியிருக்க முடியாது. வடகிழக்கு இடைக்கால நிர்வாகம் கிடைக்கும் வரைக்கும் மக்கள் காத்திருக்க வேண்டியிருக்கும். இடைக்கால நிர்வாகத்தை தமிழ் மக்களுக்கு தருவதில் ஊக்கம் செலுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்திலே, அதே அரசாங்கம் முன்னர் பதவியில் இருந்த காலத்திலே எனது திட்டங்களை ஒப்பேற்ற முடிந்தது மகிழ்ச்சி தருகிறது.

கேள்வி : எதிர்காலத்தில் தமிழ்ப் பெண்களின் அரசியல் ஈடுபாடு எப்படி இருக்குமென நம்புகிறீர்கள்?

பதில் : காலச்சக்கரம் மிக விரைவாக ஓடிக் கொண்டிருக்கிறது. இன, மத, மொழி வேறுபாடின்றி ஆண்களுக்குச் சமமாகப் பெண்களும் தமது அறிவு ஆற்றல்களை வெளிக்கொணார்ந்து பொதுவாக எல்லாத்துறைகளிலும் மேன்மை பெற்று வருகிறார்கள். இந்த வரிசையில் தமிழ்பெண்களும் பின் தங்கியவர்களாக இல்லை. தமிழ்ப் பெண்களின் அரசியல் பிரவேசத்தற்குத் தடையாக இருந்த தடங்கல்கள் களையப்பட்டு ஓர் அரசியல் அமைதிச் சூழ்நிலை உருவாகும் பட்சத்தில் நிச்சயமாக அரசியல் ஈடுபாட்டிலும் ஒரு முன்னேற்றம் ஏற்படுமென்று நம்புகிறேன். அரசியல் பிரவேசத்தின் முதற்படி சமூகசேவையும் மக்களின் நலனில் ஏற்படும் அக்கறையுமேயாகும். இதற்கு ஏதுவாக நம் பெண்கள் இன்று பல மகளிர் அமைப்புக்களின் மூலம் மக்களின் நலனுக்காகக் குறிப்பாகப் பெண்களின் பிரச்சனைகளை இனங்கண்டு அவற்றினை நீக்குவதற்காக உழைத்துக் கொண்டு இருப்பதையும், பல பெண்கள் தங்களை முழுமையாக இத்தகைய பொதுச் சேவைகளுக்கு அர்ப்பணித்துள்ளமையையும் காணக்கூடியதாக உள்ளது. இத்தகைய அரிய சேவைகள் மக்களால் கவரப்படுகின்ற போது, அதே மக்கள் சக்தியால் உந்தப்பட்டு அரசியல் நீரோட்டத்தில் தமிழ்ப் பெண்களும் கலக்கிற ஒரு நிலை தானாகவே உருவாகி விடும் என நான் எதிர்பார்க்கிறேன். அந்த எதிர்பார்ப்பு நிறைவேறுவதற்கான ஒரு கால கட்டம் தற்போது அரும்பியுள்ளது. அரும்பு மலராகிக் காயாகிக் கனியும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்று நம் நாடு முழுமையான நம்பிக்கையுடன் எதிர்பார்த்து நிற்கிறது. நம்பிக்கை நிஜமாக இறையருள் கிட்ட வேண்டுவோமாக.

கேள்வி : இலங்கையின் வடகிழக்கு மாகாண மக்களின் சுயாட்சி எழுச்சிக்கான செயற்பாடுகளினால் விழிப்புணர்வு பெற்ற தமிழ்ப் பேசும் பெண்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு அம்மக்களின் மேம்பாட்டுக்காக உழைக்க வேண்டும் என்பது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில் : வடகிழக்குப் போராட்டம்ஓர் உன்னதமான, தனித்துவமான போராட்டம். அரசியல் போராட்டங்கள் பாதிப்புகள் பெரும்பாலும் வீட்டுக்கு வெளியில் தாக்கங்களை ஏற்படுத்திய நிலைமாறி வீட்டிற்குள்ளேயும், ஏன் தமிழ் மக்கள் ஒவ்வொருவரின் உள்ளத்து உணர்வுகளிலும் பாதிப்பை ஏற்படுத்திய நிலையில் உருவான ஒரு போராட்டம். ஆண், பெண், குழந்தை, முதியவர் என்ற எவ்விதவேறுபாடுமின்றி தமிழ் மக்கள் பெரும்பாதிப்புக்குள்ளான ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அந்தப்பாதிப்பு தமிழ் மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. உலகமாற்ற வேகத்தால் ஏற்பட்ட சந்ததி இடைவெளி, தமிழ்ப் பெண்ணினத்திற்கு ஏற்பட்ட தாக்கத்தின் வலிமை என்பன பெண்களிடையே இருந்த கலாச்சாரக் கோட்பாடு, பெண்ணின் மென்மை, அச்சம் போன்றவற்றைத் தகர்த்தெறிந்து போராட்டத்திற்கு ஓர் உந்து சக்தியாக அமைந்தது என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்யடும். உரிமை பெற விழித்தெழுந்த பெண்ணினம் தங்கள் குறிக்கோளை நிறைவேற்றக் கூடிய ஒரு வாய்ப்புக்

கிடைக்கும் பட்சத்தில் எந்த வகையிலாவது அந்த வாய்ப்பினைப் பயன்படுத்த முன் வரவேண்டும். உரிமை பேணப்பட வேண்டும். மக்களின் நலம் காக்கப்பட்ட வேண்டும். நாட்டின் வளம் மேம்படுத்தப்பட வேண்டும். எனவே விழிப்புற்ற தமிழ்பெண்ணினம் தமது தன்னலமற்ற தன்மை, தியாக உணர்வு, தெளிவான சிந்தனை, மன உறுதியும், செயல் திறனும் கொண்ட ஆற்றல் என்பவற்றை தமது அணிகலனாகக் கொண்டு அரசியல் நீரோட்டத்தில் எதிர்நீச்சல் போடவும் தயாராக இருக்கவேண்டும்.. உண்மையான ஜனநாயகக் கோட்பாடுகளைக்கொண்ட ஓர் அரசியல் சமூகமானது மக்களுக்காகத் தனனை அர்ப்பணித்துத் தன்னலமற்ற சேவை யாற்றக்கூடிய அரசியல் பங்காளர்களையும், கடமை, நேர்மை, கண்ணியம், ஒழுங்கு என்பவற்றை கருத்திற்கொண்டு பணியாற்றும் அதிகாரிகளையும் கொண்டதாக இருக்கவேண்டும். அப்போதுதான் அங்கே ஓர் உன்னதமான ஜனநாயக வாழ்வை நாம் காணமுடியும், வாழ்விற்கிதமான ஒருவித சுதந்திரக்காற்றைச் சுவாசிக்கமுடியும் என்பது எனது அபிப்பிராயம்

கேள்வி : நீங்கள் அரசியலில் ஈடுபட்டதைத் தவிர, ஏனைய துறைகளில் புரிந்து வரும் பணிகள் எவை?

பதில் : எனது அரசியல் ஈடுபாடே எனது சமூக, சமயப் பணியின் பின்னணி என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் நான் அரசியலில் இறங்குவதற்கு முன்பே பல சமூக சேவை அமைப்புக்களில் கலந்து கொண்டு பங்காற்றியுள்ளேன். அவற்றுள் அகில இலங்கை மாதர் மன்றம் கொழும்பு சர்வதேச மகளிர் சங்கம், இலங்கைத் தமிழ் மாதர் சங்கம், கொழும்பு இந்து மகளிர் மன்றங்கள் என்பவை குறிப்பிடத்தக்கவை. கொழும்பு சர்வதேச மகளிர் சங்கத்தின் நீண்ட கால உறுப்பினராக இருந்ததுடன் சில காலப் பகுதயில்செயலாளராகவும் செயலாற்றி யுள்ளேன். கொழும்பு இந்து மகளிர் மன்றம் 1965ம் ஆண்டில் உருவாகுவதற்கு முக்கிய கர்த்தாக்களாக இருந்தவர்களில் நானும் ஒருவர். கொழும்பு வாழ் இந்து மகளிர் நலன் பேண என ஆரம்பிக்கப்பட்ட அந்த மன்றம் தன் சார்பில் வெள்ளவத்தையில் தமிழ் பெண்களுக்கென்று ஒரு விடுதியையும் நிர்மாணித்தது. அதனால் கொழும்பு நகரில் வேலை பார்க்கும் பல இந்து யுவதிகள் பயனடையக் கூடியதாக இருந்தது. 1983ம் ஆண்டின் பின் தொடர்ந்து செயற்பட முடியாத நிலை ஏற்பட்டமை கவலைக்குரிய விடயமே. இலங்கைத் தமிழ் மாதர் சங்கம் தமிழ் கலை கலாச்சார சேவையினை முனைப்பாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. சங்கீதம், நடனம் போன்ற பயிற்சி வகுப்புக்களும் நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. இதில் 1962ம் ஆண்டில் இருந்து நிர்வாக குழுவில் கடமையாற்றினேன். இடைப்பட்ட காலத்தில் நான் அரசியலில் ஈடுபட்டு எனது அரசியல் பணியில் முற்று முழுதாக ஈடுபட வேண்டியேற்பட்டதால் இப்பணியிலிருந்து சிறிது தூரம் விலகி நிற்கவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் திரும்பவும் புத்துயிர் பெற்றுச் செயல்பட்டு வரும் இத்தமிழ் மாதர் அமைப்புக்களின் செயற்பாடுகளில் நான் தீவிரமாகப் பங்காற்றி வருகிறேன். தற்பொழுது போஷகராகப் பணிபுரியும் இந்து மகளிர் மன்றம் சகலவிதமான சமய, சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருவதுடன் இந்துப் பெண்களுக்கான ஒரு முதியோர் இல்லத்தையும் நடத்தி வருகிறது.

கேள்வி : பெண்கள் குடும்பச் சுமையோடு அரசியல், சமூக, சமயப் பணிகளிலும் ஈடுபட்டுச் சிறப்பாகத் தொண்டாற்ற இயலுமா?

பதில் : குடும்பம் என்பது ஒரு சுமையல்ல பாசத்தினால் சுற்றி வளைக்கப்பட்டு, அன்பெனும் நீரூற்றி வளர்க்கப்பட்ட ஒருகுடும்பம் உள்ளத்திற்கு இதந்தரும் ஒரு பூங்கா. பற்று, பாசம், அன்பு, ஆர்வம் இவை கலந்த எதுவும் கடினமாகவோ, சுமையாகவோ அமைவதில்லை.

ஓர் இல்லத்தரசிக்கு தன் குடும்பத்தைத் தாங்கும் பணி மகத்தானது. ஏனோதானோ என்றில்லாமல் நேரம், செயல் என்பவற்றைத் திட்டமிட்டுக் கருமமாற்றிக் குடும்பத்தை ஓர் வளமாக்கும் ஓர் இல்லத்தலைவியினாலேயே நாட்டையும் திட்டமிட்டு வளப்படுத்த முடியும் என்பது என் எண்ணம். குடும்பப் பணியைப் பாரமாகக் கருதிச் சலிப்படையாமல் எமது திறமைகளை வெளிக் கொணரும் வாய்ப்பினை ஏற்படுத்தி அரசியலில் மட்டுமன்றி கலை, கல்வி, நிதி, நீதி சமூக மேம்பாட்டுத் துறைகளிலிலும் எம்மைத் தீவிரமாக ஈடுபடுத்தி எமது தலைமைத்துவத்தை நிலை நாட்ட முயலவேண்டும். நடுநிசியில் ஒரு பெண் வெளியில் நடமாடும் நிலை தான் உண்மையான சுதந்திரம் என்று கருதியவர் காந்தி அவர்கள். அத்தகைய நடமாட்டத்திற்குரிய நிலைக்கு தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளும் மனஉறுதி, தைரியம் பெண்களுக்கு ஏற்பட வேண்டும்; தன்னம்பிக்கை வலுவடைய வேண்டும்; ஆர்வம் வேண்டும்; இந்தத் தன்னம்பிக்கை ஆர்வம் என்பன பிறர் தர வருவதில்லை. எம் சிந்தனைத் தெளிவால் பெறப்படுபவை. எமது தமிழினப் பெண்களின் குரல் அரசியலிலும் பல தலைமைப் பீடங்களிலும் ஒலிக்க வேண்டும் என மிக மிக ஆவலாகவும் ஆர்வமாகவும் உள்ளேன்.

# பாராளுமன்றத்தில் பெண்கள்

## ந. சரவணன்

முதன் முறையாக நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பெண் லேடி எட்லின் மொலமுரே இவரது தந்தையான ஜோன் ஹென்றிமீதெனிய அதிகாரம் என்பவரின் மரணத்தைத் தொடர்ந்து அவரது தொகுதியான 'ருவன்வெல்லவில்' 1931 நவம்பரில் நடத்தப்பட்ட இடைத் தேர்தலில் அவரது மகளான மொலமுரே அம்மணி போட்டியிட்டு அரச சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

அரசியலைப் பற்றிய இலங்கைப் பெண்களின் அக்கறையற்ற அக்காலத்தில் அவர் தெரிவு செய்யப்பட்டமை பெண்கள் அரசியலில் பங்குபற்றுவதற்கான துணிவையும் ஆரம்பத்தையும் கொடுத்தது.

1931லேயே அரச சபைக்கு இன்னொரு பெண்ணும் தெரிவு செய்யப்பட்ட போதும் அவரும் இடைத்தேர்தலொன்றின் மூலமாகவே தெரிவு செய்யப்பட்டார். கொழும்பு வடக்கைப் பிரதிநிதிப்படுத்திய ரத்ன ஜோதி சரவணமுத்துக்கு எதிராகச் செய்யப்பட்ட தேர்தல் முறைப்பாட்டைத் தொடர்ந்து கொழும்பு வடக்கில நடத்தப்பட்ட இடைத்தேர்தலில் அவரது மகள் நேசம் சரவணமுத்து போட்டியிட்டு அரச சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

1986ல் இரண்டாவது அரச சபைக்கான பொதுத் தேர்தலில் மூன்று பெண்கள் முன்வந்து போட்டியிட்ட போதும் கொழும்பு வடக்கில் போட்டியிட்ட நேசம் சரவணமுத்து மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். இவரைவிட ஹட்டன் தொகுதியில் சி.எஸ்.ராஜரட்னம் ருவன்வெல்ல தொகுதியில் எட்வின் மொலமுரே ஆகியோர் போட்டியிட்டபோதும் வெற்றிபெறவில்லை.

இத்தேர்தலின் மூலம் இலங்கையின் முதன் முதலில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்ட பெண் என்ற பெருமை நேசம் சரவணமுத்துவைச் சாரும்.

அரச சபை முறை நீக்கப்பட்டு பாராளுமன்ற முறை கொண்டு வரப்பட்டது. 1947ல் நடந்த முதலாவது பொதுத்தேர்தலில் மூன்று பெண்கள் போட்டியிட்டனர். மத்திய கொழும்பிலிருந்து ஆயிஷா ரவூப் பலப்பிட்டி தொகுதியிலிருந்து ஸ்ரீமதி அபய குணவர்தன கிரிஎல்ல தொகுதியிலிருந்து பிளாரன்ஸ் செனநாயக்கா மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர். முதலாவது பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்குள் இன்னும் இரு பெண்கள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டனர். அவிஸ்ஸாவெலயில் பிலிப் குணவர்த்தனவின் ஆசனத்துக்குப் பதிலாக அத்தொகுதியில் 1948 ஏப்ரிலில் நடந்த இடைத் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட குசும்சிறி குணவர்தன (பிலிப் குணவர்த்தனாவின் மனைவி) அடுத்து கண்டி தொகுதியில் டி.பி. இலங்கரத்னவின் ஆசனத்திற்குப் பதிலாக 1949 யூனில் அத்தொகுதியின் இடைத்தேர்தலில் போட்டியிட்ட இலங்கரத்தினாவின் மனைவி தமராகுமாரி தெரிவு செய்யப்பட்டார்.

1952ம் ஆண்டு நடந்த இரண்டாவது பொதுத்தேர்தலில் 12 பெண்கள் போட்டியிட்டனர். (முதலாவது பொதுத் தேர்தலில் மூவரே போட்டியிட்டிருந்தனர்) இவர்களில் இருவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர். ஒருவர் அவிஸ்ஸாவெல தொகுதியில் குசும்சிறி குணவர்தன மற்றும் அகுரஸ்ஸ தொகுதியில் டொரின் விக்கிரமசிங்க. இவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவர் டொக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்காவின் மனைவி. இவர் விப்லவகாரி சமசமாஜ பக்ஷயசார்பில் போட்டியிட்டார். அத்துடன் இவர் ஆசியாவிலே பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு முதன்முறை பிரதிநிதித்துவம் பெற்ற மேற்கத்தைய பெண்ணுமாவார்.

பிரித்தானியாவில் இவர் கிறிஸ்தோபர் கல்லூரியில் பிரபல்யமான கம்யூனிஸ்டான பேராசிரியர் லஸ்கியின் மாணவியாக இருந்தார். அந்தவேளை வீ.கே. கிருஷ்ணமேனன் இங்கிலாந்தில் வரலாற்றுத்துறை விரிவுரையாளராக இருந்தார். பிற்காலத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சரானார். கலாநிதி என்.எம். பெரேரா எஸ்.ஏ. விக்கிரமசிங்க ஆகியோருடன் நெருங்கிப் பழக வாய்ப்புக் கிடைத்ததனால் ஏகாதிபத்திய விரோத விடுதலைப் போராட்டக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார்.

இதன் காரணமாகக் காலனியா திக்கத்துக்கு உள்ளாகியுள்ள குறிப்பாக இந்தியாவுக்குச் சென்று முற்போக்கு அரசியல் சீர்திருத்த வேலைகளில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்தார். இந்தியாவில் வேலை செய்வதற்கான சாத்தியம் இல்லாது போனபோது இலங்கை க்கு வந்து சேர்ந்தார்.

இலங்கையில் 1933 ஏப்பிரலில் எஸ்.ஏ.விக்கிரமசிங்காவை திருமணம் செய்து கொண்டார். இலங்கையில் இடதுசாரி அரசியலில் தீவிரமாக ஈடுபடவும்

தொடங்கினார். சூரியமல் இயக்கத்தில் முக்கிய பாத்திரம் வகித்துச் செயல்பட்டார். பிரித்தானியா தனது சொந்த நாடாக இருந்தபோது அதன் ஏகாதிபத்திய செயற்பாட்டுக்கெதிராக இலங்கையருடன் சேர்ந்து போராடினார். இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி 1935ல் ஆரம்பிக்கப்பட்ட போது அதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

இலங்கை அரசியல் வரலாற்றில் குறிப்பாக பெண் அரசியலில் திருப்பமாக 1960 தேர்தலைக் குறிப்பிடலாம். முதன் முதலில் பெண் ஒருவர் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது இத்தேர்தலிலேயே. மேலும் இத்தேர்தலில் போட்டியிட்ட ஐந்து பெண்களில் நால்வர் தெரிவு செய்யப் பட்டிருந்தனர். தெடிகம தொகுதியில் போட்டியிட்ட விமலா கன்னங்கரா மட்டுமே தோல்வியடைந்தார்.

கொழும்பு வடக்கிலிருந்து விவியன் குணவர்த்தன, அவிஸ்ஸாவெல தொகுதி யிலிருந்து கிளோடா ஜயசூரிய, மிரிகம தொகுதியிலிருந்து விமலா விஜயவர்த்தன மற்றும் கிறி எல்ல தொகுதியிலிருந்து குசுமா குணவர்த்தன ஆகியோரே இத்தேர்தலில் வெற்றி பெற்றிருந்தனர்.

இவ்விரண்டாவது பாராளுமன்றத்தின் போது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் சுகாதார அமைச்சராகவிருந்த விமலா விஜயவர்த்தன தெரிவு செய்யப்பட்டார். இலங்கையில் மட்டுமன்றித் தென் ஆசியாவிலேயே அமைச்சராகப் பதவி வகித்த முதற்பெண் இவராவர்.

மேலும் இத்தேர்தலில் தம்பதிகளான இரு சோடிகள் பாராளுமன்றத்திற்குத் தெரிவானார்கள். விவியன் - லெஸ்லி குணவர்த்தன, குசுமா - பிலிப் குணவர்த்தன ஆகியோரே அவர்கள்.

1956 தேர்தலில் வெலிமட தொகுதியில் வெற்றிபெற்ற கே.எம்.பி ராஜரட்னாவின் ஆசனம் நீதிமன்றத் தீர்ப்பொன்றின் மூலம் இரத்துச் செய்யப்பட்டதால் 1957 செப்டம்பரில் அங்கு இடைத் தேர்தல் நடத்தப்பட்டது. இத்தேர்தலில் அவரது மனைவி குசுமா ராஜரத்னா போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1959ம் ஆண்டு செம்ரம்பர் மாதம் 25ம் திகதி அன்றை பிரதமர் எஸ்.டபிள்யூ, ஆர்.டி. பண்டாரநாயக்கா பௌத்த மதகுரு ஒருவரினால் சுடப்பட்டு மரணமடைந்தார். அதன் காரணமாக அவரது தொகுதியான அத்தனகலையில் நடந்த இடைத்தேர்தலில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா போட்டியிட இருந்த வேளை அன்றைய இடைக்காலப் பிரதமர் தஹநாயக்காவினால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

1960ம் ஆண்டு மார்ச் மாதம் நடந்த நான்காவது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் 14 பெண்கள் போட்டியிட்டனர் என்றாலும் இத்தேர்தலில் மூவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர்.

தெகியோவிட தொகுதியில் இருந்து சோமா விக்கரமநாயக்க, கலிகமுவ தொகுதியிலிருந்து விமலா கன்னங்கரா, ஊவா பரணகம தொகுதியிலிருந்து குசுமாராஜரத்னா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இலங்கையின் நான்காவது பாராளு மன்றம் 33 நாள் ஆயுட்காலத்தைக் கொண்டிருந்தது. பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பொன்றின் போது அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டதனால் பாராளுமன்றம் கலைந்தது. 1960 ஜுலையில் ஐந்தாவது பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டபோது பெண்களில் நால்வர் மட்டுமே போட்டியிட்டனர். ஊவா - பரணகம தொகுதியிலிருந்து குசுமா ராஜரத்னா, தெகியோவிட்ட தொகுதியிலிருந்து விமலா கன்னங்கரா சோமா விக்கிரம நாயக்கா, கொழும்பு வடக்கிலிருந்து விவியன் குணவர்த்தன ஆகியோர் போட்டியிட்டனர்.

இத்தேர்தலில் மூவரும் தெரிவு செய்யப்பட்ட போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் சி. பி. டி. சில்வா பாராளுமன்ற ஆசனத்திலிருந்து விலகி சிறிமாவுக்கு ஒப்படைத்தார். கட்சித்தலைவர் என்ற ரீதியில் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா அப்பொதுத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறாததனால் எதிர்தரப்பின் காரசாரமான எதிர்நிலை விமர்சனத்திற்கு உள்ளானார். சோல்பரி அரசியல் திட்டத்தின்படி தேர்தலில் போட்டியிடா விட்டாலும் திருமதி பண்டாரநாயக்காவுக்கு பிரதமர் பதவி வழங்குவதில் தடையெதுவுமில்லை எனச் சிறிமாவின் தரப்பினர் பகிரங்கமாகக் கூறினர்.

அதன்படி 1960 ஜுலை 21ந் திகதியன்று திருமதி. சிறிமா ஐந்தாவது பாராளு மன்றத்தின் பிரதமராக அன்றைய தேசாதிபதி ஒலிவர் குணதிலக முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து உலகின் முதல் பெண் பிரதமர் எனும் ஸ்தானத்தைப் பெற்றுக் கொண்டார்.

இத்தேர்தலில் தெகியோவிட்டயில் சோமா விக்கிரம நாயக்காவும் ஊவா பரணகம தொகுதியிலிருந்து குசுமா ராஜரட்ண ஆகிய இருவருமே தெரிவு செய்யப்பட்டனர். 1964ல் டொக்டர் டி. டபிள்யூ. சில்வாவின் மரணம் காரணமாக அவரது தொகுதியான பொரலலையில் 1964 ஜனவரியில் நடத்தப்பட்ட இடைத்தேர்தலில் திருமதி விவியன் குணவர்த்தனா போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இவர் உள்ளூராட்சி நிர்வாக அமைச்சராக இருந்ததுடன் பதில் பிரதமராகவும் இருந்தார்.

இலங்கையின் ஆறாவது பாராளுமன்ற தேர்தலில் 14 பெண் வேட்பாளர்கள்

போட்டியிட்டனர். இவர்களில் நால்வர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர்.

முதற் தடவையாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பாராளுமன்றத் தேர்தலில் அத்தனகல்ல தொகுதியில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டார். ஊவா பரணகம தொகுதியிலிருந்து குசுமராஜரத்ன மீரிகம தொகுதியிலிருந்து சிவா அபயசேகர கலிகமுவதொகுதியிலிருந்து விமலா கன்னங்கரா போன்றோர் தெரிவு செய்யப்பட்னர். அத்துடன் பாராளுமன்றத்தில் காலம் முடிவதற்குள் மேலும் இருபெண்களும் பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்தனர்.

ஒருவர் பலங்கொட தொகுதியிலிருந்து ஒக்டோபர் 1966ல் நடந்த இடைத்தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட மல்லிகா ரத்வத்தை (இவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கிளிபர்ட்ரத்வத்தவின் மனைவி)

அடுத்தவர் தொடங்கஸ்லந்த தொகுதியில் 1967 ஜனவரியில் நடநத இடைத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ரடீசியா ராஜபக்ஷ (இவர் தொடகஸ்லந்த தொகுதி உறுப்பினர் ஆர்.ஆர். டபிள்யூ. ராஜபக்ஷவின் மனைவி).

1970ம் ஆண்டு 7வது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நடந்தது. இதில் 14 பெண் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களில் 6 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அத்தனகல்ல தொகுதியிலிருந்து சிறிமா பண்டாரநாயக்க, பலாங்கொட தொகுதியிலிருந்து மல்லிகா ரத்வத்த மிரிகம தொகுதியிலிருந்து தமராகுாரி இலங்கரத்ன, பொரல்ல தொகுதியிலிருந்து குசுமா அபேவர்த்தன, தெகிவளை - கல்கிசைத் தொகுதியிலிருந்து விவியன் குணவர்த்தன ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இத்தேர்தலின் பின் இரண்டாவது தடவையும் சிறிமாவோ பிரதமராகத் தெரிவானார். 10 ஆண்டுகளுக்குள் இருதடவை பிரதமராகவும் ஒரு தடவை எதிர்க்கட்சித் தலைவியாகவும் இக்காலப் பகுதியில் திருமதி. சிறிமா இருந்ததால் உலகம் முழுவதும் அன்று அறிந்த நபராகக் கணிக்கப்பட்டார்.

இலங்கையின் 8வது பொதுத்தேர்தல் 1977இல் நடந்தபோது 14 பெண் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். என்றாலும் நால்வரே தெரிவு செய்யப்பட்டனர்.

அத்தனகல்ல தொகுதியிலிருந்து திருமதி சிறீமா வலபன தொகுதியிலிருந்து ரேனுகா ஹேரத், வாரியபொல தொகுதியிலிருந்து அமரா பியசிலிரத்னாயக்க, கலிகமுவ தொகுதியிலிருந்து விமலா கன்னங்கர ஆகியோர் வெற்றி பெற்றனர்.

ஆசனம் காலியானால் இடைத்தேர்தல் வைக்காமலேயே தெரிவு செய்யக்கூடிய முறை 1977க்குப் பின் கொண்டு வரப்பட்டமையினால் 1977க்கும் 1984க்கும் இடையில் 6 பெண் உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்தனர்.

பொத்துவில் தொகுதியிலிருந்து எம். கனகரத்தினத்தின் ஆசனம் காலியானதையிட்டு அவரது சகோதரி ரங்கநாயகி பத்மநாதனும் (சுதந்திரத்திற்குப் பின்னர் முதன் முதல் பாராளுமன்றத்துக்குப் பிரவேசித்த தமிழ்ப் பெண் இவர்) கரந்தெனிய தொகுதியில் பந்துல சேனாதீரவின் மரணத்தைத் தொடர்ந்து அவரது மனைவி சேபாலி சேனாதீரவும் ஹேவாஹெட தொகுதியிலிருந்து அனுர டேனியலின் இராஜினாமாவைத் தொடர்ந்து அவரது சகோதரி நிருபா ஸ்ரீயானி டேனியலும் ஹரிஸ்பத்துவ தொகுதியில் ஆர்.பி. விஜேசிறியின் இராஜினாமாவைத் தொடர்ந்து அவரது மனைவி எல்.எம். விஜேசிறியும் பாராளுமன்றத்திற்குப் பிரவேசிக்க முடிந்தது.

இதை விட தெகிவளை தொகுதியிலிருந்து எஸ்.டி.எஸ் ஜயசிங்கவின் மரணத்தைத் தொடர்ந்து நடத்தப்பட்ட இடைத்தேர்தலில் அவரது மகள் சுரேத்திராரணசிங்க போட்டியிட்டு வெற்றி பெற்றார். பாராளுமன்றத்தில் குண்டு வெடிப்பு சம்பவத்தில் கொல்லப்பட்ட தெனியாய பாராளுமன்ற உறுப்பினர் கீர்த்தி அபய விக்கிரமவுக்குப் பதிலராக அவரது சகோதரி கீர்த்திலதா அபயவிக்கிரவும் ரம்புக்கன தொகுதி பாராளுமன்ற உறுப்பி னரும் சமூக சேவைகள் அமைச்சராகவுமிருந்த அசோக கருணா ரத்னவின் மரணத்தைத் தொடர்ந்து அவரது மகள் 'சமந்தா கருணரத்னவும் பாராளு மன்றத்திற்குப் பிரவேசித்தனர்.

எட்டாவது பாராளுமன்றத்திலிருந்த திருமதி சுனேத்திரா ரணசிங்க சுகாதார இராஜாங்க அமைச்சராகவும் பின்னர் சுகாதார அமைச்சராகவும் பதவி வகித்தார். இதன் பின்னர் மகளிர் விவகார அமைச்சராகவும் கல்விச் சேவைகள் அமைச்சராகவும் தொடர்ந்து பதவிகளுக்கு நியமிக்கப்பட்டார்.

திருமதி ரேணுகா ஹேரத் சுகாதார மகளிர் விவகார அமைச்சராகவும் நுவரெலியா மாவட்ட அமைச்சராகவும் பதவி வகித்தார். திருமதி அமரா பியசீலி ரத்நாயக போக்குவரத்து ராஜாங்க அமைச்சராகவும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராகவும் பதவி வகித்தார்.

திருமதி ரங்கநாயகி பத்மநாதன் மட்டக்களப்பு மாவட்ட அமைச்சராகவும் திருமதி சமந்தா கருணாரத்ன சமூக சேவைகள் புனர்வாழ்வு அமைச்சராகவும் பதவி வகித்தனர்.

ஒன்பதாவது பாராளுமன்றம்

1982ம் ஆண்டு பொதுத் தேர்தலானது விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின்பின் முதற்தடவையாக நடத்தப்பட்ட பொதுத்தேர்தலாகும்.

இவவொன்பதாவது பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில்

ஏழுபேரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் நாண்கு பேருமாக மொத்தம் 11 பெண் உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்குப் பிரவேசித்தனர்.

ஐக்கிய தேசியக்கட்சி
சுநேத்ரா ரணசிங்க
சமந்தா கருணரத்ன
ரேணுகா ஹேரத்
அமரபியசீலி ரத்னாயக்கா
சுஜாதா தர்மவர்தன
ராசமனோகரி புலேந்திரன்
சந்திரா கருணாரத்ன

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி
சிறிமாவோ பண்டாரநாயக்கா
சுமித்திரா பிரியங்கனி அபேவீர
குணவதி திசநாயக்க
ஹேமா ரத்னாயக்க

இவர்களுடன் வேட்புமனுத் தாக்கலின் பின் கொல்லப்பட்ட களுத்துறை இந்திரபால அபேவீரவுக்குப் பதிலாக அவரின் மகள் 'சுமித்திரா பிரியங்கனி அபேவீரவும் பதுளை மாவட்டத்தில் 'பி.பி. இரத்நாயக்க தேர்தல் நடப்பதற்குமுன் கொல்லப்பட்டதால் அவருக்குப் பதிலாக அவரது மனைவி ஹேமா ரத்னாயக்காவும் மொனராகலை மாவட்டத்தில் 'சுமே ஜயசேன' நோய்வாய்பட்டு இறந்ததன் பின் அவரது மனைவி குணவதி திசநாயக்கவும பாராளுமன்றம் சென்றனர்.

மேற்படி பெண்கள், வேட்புப்பட்டியலுக்கு அவர்களின் பெயர்களை சேர்த்ததன் மூலம் பாராளுமன்றத்துக்குச் செல்ல முடிந்தது.

10வது பாராளுமன்றம்

1994 ஒகஸ்ட் 16ந் திகதி நடந்த பொதுத் தேர்தலின் மூலம் இலங்கையின் இரண்டாவது பெண் பிரதமரையும் 10வது பாராளுமன்றம் தோற்றுவித்தது. இத்தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார்.

10வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் மொத்தம் 1440 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களில் 45பேர் பெண் வேட்பாளர்கள். இது மொத்த வேட்பாளர் தொகையில் 3.12 வீதமாகும்.

தலா 249 வேட்பாளர்களைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, பொது ஜன ஐக்கிய முன்னனி ஆகிய கட்சிகள் முறையே 6.7 என்ற விகிதத்தில் பெண்கள் தேர்தலில் பங்கு கொண்டனர். இத் தேர்தலில் அதிக பெண் வேட்பாளர்களைப் போட்டியிடச் செய்த கட்சி ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி, இக்கட்சி 15 பெண் வேட்பாளர்களை நிறுத்தியிருந்தது. என்ற போதும் ஒரு வேட்பாளரும் வெற்றி பெறவில்லை.

இலங்கைப் பெண்கள் அரசியலில் ஏற்பட்ட இன்னொரு திருப்பமாக இத்தேர்தலையும் குறிப்பிடலாம். இத்தேர்தல் பெண் விடயங்களில் பின்வருமாறு முக்கியத்துவம் பெறுகிறது.

அதிக பெண் உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டனர். மொத்தம் 12 பேர்.

1. சந்திரிகா குமாரணதுங்கா (கம்பஹா)
2. ஸ்ரீமணி அத்துலத்முதலி (கொழும்பு)
3. சுமேதா ஜயசேன (மொனராகல)
4. சுமிதா பிரியங்கனி அபேவீர (களுத்துறை)
5. ஹேமா ரத்ணாயக்க (பதுளை)
6. நிருபமா ராஜபக்ஷ (ஹம்பாந்தோட்டை)
7. பவித்திரா வன்னியாராச்சி (இரத்தினபுரி)
8. அமரா பியசிலி ரத்ணாயக்க (குருநாகல்)
9. ரேணுகா ஹேரத் (நுவரெலியா)
10. சிறிமா பண்டார நாயக்க (தேசியப்பட்டியல்)
11. ராச மனோகரி புலேந்திரன் (வன்னி)

(''இலங்கைப் பாராளுமன்ற அரசியலில் பெண்கள்''என்ற கட்டுரையின் ஒரு பகுதி.)

நன்றி : நிவேதினி சித்திரை 1995

## இலங்கையின் பதினோராவது நாடாளுமன்றத்தில் பெண்கள்

இன்றைய நாடாளுமன்றம் சொற்ப அளவு பெண்களுடன் வழமையை விடக் கூடிய ஆணாதிக்க கலாச்சாரத்தையும் பாலியல் நையாண்டியையும் கொண்ட 97% ஆண்கள் கழகமாக அமைந்துள்ளது. 1930இன் முற்பகுதியில் சட்டசபைக்கு தெரிவு செய்யப்பட் 50 அங்கத்தவர்களில் 2 பெண்கள் இருந்தனர். சட்டமன்றத்தில் பெண்கள் விகிதத்தில் மாற்றம் ஏற்படவேயில்லை. இன்று நாடாளு மன்றத்தில் பெண்களின் எண்ணிக்கை அதிகரிப்ப தற்கு பதிலாக எச்சரிக்கை அடைய வேண்டிய விகிதத்தில் 11லிருந்து 9 ஆகச் சறுக்கிவிட்டது இறுதிப் பாராளு மன்றத்தில் 4.8% பெண்கள் இருந்தார்கள் இன்றோ அது 3.5% என்றாகிவிட்டது. உலகளாவியரீதியில் பாராளுமன்றத்தில் பெண்களின் பங்கேற்பைக் கணிக்கும்போது நாம் 97வது இடத்தில் இருந்தோம். இன்று நாம் அதலபாதாளத்தில் விழுந்து விட்டோம். கடந்த பாராளுமன்றத்தில் சிறப்புடன் இயங்கிய பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் இம்முறை தமது ஆசனங்களை இழந்திருக்கின்றனர். பெண்கள் விவகார அமைச்சர் ஹேமாரட்னாயக்கா, பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ, போக்குவரத்து அமைச்சராகப் பணியாற்றிய ஸ்ரீமணி அத்துலத்முதலி மற்றும் சுமித்திரா பிரியங்கனி அபேவீர, ரேனுகா ஹேரத், திருமதி. இராசமனோகரி புலேந்திரன் ஆகியோர் இதில் அடங்குவர்.

புதிய பாராளுமன்றத்தில் இருக்கும் 9 பெண்களில் 3 பேர் அமைச்சர்களளாக நியமிக்கப்பட்டுள்ளனர். பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட 5 பெண்கள் புதியவர்கள். அதில் இருவர் இலங்கைப் பாராளுமன்றத்துள் நுழைந்த முஸ்லிம் பெண்கள் எனச் சரித்திரம் படைத்துள்ளனர். துரதிஷ்டவசமாக பொ.ஐ.முன்னனியிலோ அல்லது ஐ.தே.க.விலோ தேசியப் பட்டியலில் ஒரு பெண்ணும் வரவில்லை. பொ.ஐ.மு. யின் தேசியப் பட்டியலில் இடம் பெற்ற 3 பெண்களின் பெயர்களும் மாயமாக மறைந்துவிட்டன. ஆனால் ஜே.வி.பி. யினர் மினுவாங்கொடையைச் சேர்ந்த அஞ்சான் உம்மா என்பவரை அறிமுகம் செய்துள்ளனர். 1971ம் ஆண்டு முதல் அரசியலில் பணியாற்றிய இவர் அண்மையில் மேல் மாகாண சபை உறுப்பினராக இருந்ததால் இவருடைய மூத்த சகோதரரும் கணவரும் ஜே.வி.பியில் பணியாற்றியதன் விளைவாகவே இவர் அரசியலுக்கு இழுக்கப்பட்டார். இவர் மினுவாங்கொட மகாவித்தியாலயத்தில் க.பொ.த உயர்தர வகுப்பு வரை கல்வி பயின்றவர்.

### பெண் அமைச்சர்கள்

பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறைந்துவரும் இவ்வேளையில் பெண் அமைச்சர்கள் தொகை சற்று அதிகரித்துள்ளது. பெண்கள் விவகார அமைச்சர் சுமேதா ஜெயசேன, பொ.ஐ.மு.யின் சார்பில் போட்டியிட்டு 33, 946 வாக்குகளைப் பெற்று பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினர் ஆகியுள்ளார். கடந்த பாராளுமன்றத்தில் இவர் சமூகசேவை அமைச்சராகப் பணியாற்றியவர். 1989ல் அவரது கணவர் சுகயீனம் காரணமாக இறந்த பின்னர் மொனராகலயில் விதவையாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டி பாராளுமன்றத்தில் இவர் காலடி வைத்தார்.

இரத்தினபுரி தொகுதியில் பொ.ஐ.மு. யின் சார்பில் போட்டியிட்டு 108, 238 வாக்குகளைப் பெற்றுப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்த பவித்திரா வன்னியாராச்சி புதிய திட்டமிடல் அமைச்சராகப் பதவியேற்றுள்ளார். இவர் கடந்த பாராளுமன்றத்தில் பிரதி சுகாதார அமைச்சராகப் பணியாற்றியவர். சட்டத்தரணியான இவர் ஐ.தே.கட்சியின் ஆட்சியில் நடைபெற்ற (குறிப்பாக சூரியகந்தவின்) மனித உரிமை மீறல்களை ஆராய்வதில் முனைப்புடன் பணியாற்றியவர். அனுபவம் மிக்க அரசியல்வாதியான இவரது தந்தை தர்மசிறி வன்னியாராய்ச்சியும் இம்முறை தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புதிய அமைச்சரான பேரியல் அஷ்ரப் பொ.ஐ.முன்னணியின் சார்பில் திகாமடுல்ல தொகுதியில் நின்று 82553 வாக்குகளைப்



பெற்றுப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தவர். இவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் தலைவரான M.H.M. அஷ்ரப்பின் விதவை மனைவியாவார். இன்று இவர் முஸ்லிம் காங்கிரஸின் தலைவியாக ரவூப் ஹக்கீமுடன் இணைந்து N.U.A. யின் சக தலைவராக விளங்குகிறார். பேரியல் அஷ்ரப். கி.மா. கிராமிய புனருத்தாரண அமைச்சராக விளங்கினார்.

பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள

பழம்பெரும் அரசியல்வாதியான மறைந்த முதியான்சே தென்னக்கோனின் மகளான சோமகுமாரி தென்னக்கோன் பொ.ஐ.மு.யின் சார்பில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்பட்ட இன்னுமொரு பெண்மணியாவார். இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிக்கவரெட்டியப் பொறுப்பாளராக 1980களின் இறுதியிலிருந்து செயலாற்றியவர். 1999ம் ஆண்டு வடமேல் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டார். தற்போது குருணாகலைத் தொகுதியில் 49, 476 வாக்குகளைப் பெற்றுப் பாராளுமன்றுள் நுழைந்திருக்கிறார். புத்தளத் தொகுதியிலிருந்து 26, 636 வாக்குகளைப் பெற்று பொ.ஐ.மு. யின் சார்பில் வெற்றியீட்டிய சிறியாணி ஜோன் பெர்னாந்து இன்னுமொரு பெண் அங்கத்தவராகிறார். கணவர் கொட் பிரிபெர்னான்டோ புத்தளம் தொகுதியில் வெற்றிபெற்ற கையோடு நடந்த கார் விபத்தல் இறந்ததனால் இவர் விதவையானார்.

சுறாங்கனி எல்லாவெல (தென்னக்கோன்) மற்றுமொரு புதுமுகம். இவர் 1970-1977 வரை சுதந்திரக் கட்சியின் இரத்தினபுரித் தொகுதியின் பிரதிநிதியான பாராளுமன்ற உறுப்பினர் நந்தாஎல்லவெலயின் விதவை மனைவியாவார். அத்துடன் 1997ல் சுட்டுக்கொலை செய்யப்பட்ட நாலந்த எல்லவெலயின் தாயாருமாவார். இவர் 1999ல் சப்ரகமுவ மாகாணசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கடந்த ஒக்டோபர் பொதுத்தேர்தலில் 54 518 வாக்குளைப் பெற்றார்.

ஐ.தே.க. சார்பில் இரு பெண் பாராளுமன்ற உறுப்பினரே இருக்கின்றார். அதில் அமரா பியசீலி ரட்ணாயக்கா ஒருவராவர். 1977ல் அவரது கணவர் கொலையுண்ட பின்னர் வாரியப்பொல தொகுதியில் ஐ.தே.கட்சியின் சார்பில் நின்று பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.

பிரேமதாசாவின் அரசாங்கத்தின்போது உள்விவகாரத் துணையமைச்சராகப் பதவி வகித்தார். இம்முறை நடைபெற்ற தேர்தலில் குருணாகல தொகுதியில் நின்று 51, 498 வாக்குகளைப் பெற்று அங்கத்தவராகத் தெரிவு பெற்றுள்ளார். சட்டத்தரணி சந்திராணி பண்டார ஐ.தே. கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட மற்றுமொரு பெண்ணாவார். இவர் அனுராதபுரத்தில் சட்டத்தரணியாகக் கடமையாற்றுகிறார். காலஞ்சென்ற தந்தை சந்திரா பண்டாரவின் செல்வாக்கைப் பெற்றவர். இவர் பாடசாலையிலிருந்து விலகிய காலந்தொட்டு தந்தையாரின் அரசியல் வேலையில் ஈடுபட்டுள்ளார். இவர் தற்போது அனுராதபுரத் தொகுதியின் சார்பில் போட்டியிட்டு 41 874 வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துள் நுழைந்திருக்கிறார்.

அரசியற் குடும்பங்கள்

தெரிவு செய்யப்பட்ட சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசியற் குடும்பங்களிலிருந்து வந்தவர்கள் என்பது கவனிக்க வேண்டியதாகும். இந்தப் பெண் வேட்பாளர்கள் கணவர், தந்தை, தனயன், இறந்ததன் (அநேகமாகக் கொலையுண்டதன்) பின்னர் பதவிக்கு வந்தவர்கள். தேசியப் பட்டியலில் ஜே.வி.பி.யின் சார்பிற் தெரிவு செய்யப்பட்ட பெண் உறுப்பினர் குடும்பத்திலுள்ள ஆண்கள் அரசியலில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அப்படியானால் இந்தத் தேசிய ஆதிக்கம், பிரதேச ஆதிக்கம், அரசியல் ஆதிக்கமற்ற பெண்கள் சாதாரணத் தேர்தல் நடைமுறை மூலம் பாராளுமன்றத்துள் நுழையும் காலம் எப்போது?

அரசியற் கட்சிகள் பெண்களை வேட்பாளர்களாகத் தெரிவு செய்யாததும், குடும்பத்திலுள்ள ஆண்கள் (தகப்பன், கணவர், மகன்) அனுமதிக்க மறுப்பதாலும் பெண்கள் பாராளுமன்றம் புகுவது தடுக்கப்படுகிறது. அதேவேளை ஒரு குடும்பத்திலுள்ள ஆண் ஏற்கனவே அரசியலிலிருந்தால், அக்குடும்பத்திலுள்ள பெண்களும் தேர்தற் சமயங்களில் (பிள்ளைப் பிராயத்திலிருந்தே) ஆதரவு தேடுதல், ஆட்சேர்த்தல், நிதி திரட்டுதல், ஆதரவாளர்களை, வாக்காளர்களை உபசரித்தல் போன்ற வேலைகளில் கடுமையாக உழைக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார்கள். அந்த ஆண் இறக்கும்பொழுதோ அல்லது கொலையுறும் பொழுதோ அவள் அரசியலில் காலடி எடுத்து வைக்கிறாள். பெண்கள் அரசியலில் ஈடுபடா வண்ணம் வன்முறைகளும் உபயோகிக்கப்படுகின்றன.

அப்படியானால் இதற்குத்தீர்வு தான் என்ன? ஆகவே இந்த வலுவிழந்த தன்மையைச் சீர் செய்யுமுகமாகக் குறைந்தது ஒரு தசாப்தகாலத்திற்காவது கோட்டா முறையை அல்லது தேசிய பட்டியலில் கூடிய பெண்களைச் சேர்த்துக் கொள்ளுதலை அமுல்படுத்த வேண்டும்.

அரசியற் கட்சிகள் பெண்களைக் குறித்த விகிதாசாரத்தில் வேட்பாளராக நியமித்தால் அக்கட்சிகளுக்குப் பரிசாக நிதியுதவி வழங்க வேண்டும். (பிரான்சு தேசத்தில் முன்கொண்டு வரப்பட்டிருக்கிறது) அப்படி இல்லையெனில் போனஸ் ஆசனம் வழங்கப்படல் வேண்டும்.

(ஒரு சட்டத்தரணியின் கருத்துரைப்பு)

(நன்றி : 3வது கண்)

சிறுகதை :

# அட்டைகள்

பத்மா சோமகாந்தன்

''ஓடி விளையாடு பாப்பா - நீ ஓய்ந்திருக்கலாகாது, பாப்பா.........
பாதகஞ் செய்பவரைக் கண்டால் நீ பயங் கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்துவிடுபாப்பா - அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா.........''

பச்சை வெளிக்கிராமத்தின் ஓரமாக இருந்த அம்மன் கோயில் அன்னதானமடத்தில் பாரதியின் இப் பாடலைச் சிறுவர் பள்ளிமாணவர்கள் இசையோடு பாடிக் கொண்டிருந்தார்கள்.

எண்ணையும் எழுத்தையும் மட்டுமல்ல, ஒழுக்கம், பண்பு, பணிவு முதலியவற்றையும் ஆடலும் பாடலுமாக அவ்வூர் ஏழைப் பாமரமக்களின் சிறார்களுக்கு மலர் ரீச்சர் பக்குவமாக ஊட்டினாள்.

அவள் பயிற்றப்பட்ட ஆசிரியை அல்ல. க.பொ.சாதாரண தரம் மட்டுமே படித்தவள். மேற்கொண்டு படிக்க முடியாமல், குடும்ப நிலை தந்தையின் மரணங்காரணமாக வறுமைக்குள் தள்ளப்பட்டுவிட்டது. வயல்களில் வேலை செய்தும் வசதியான வீடுகளுக்குச் சென்று மாஇடித்துக் கொடுத்தும் மலரையும் தங்கையையும் காப்பாற்றும் பொறுப்புத் தாயின் தலையில் விழுந்துவிட்டது.

அவள் படித்த பாடசாலை சில மைல்கள் தூரத்தில் அடுத்த கிராமத்தில் இருந்தது. நடந்து போய் நடந்தே திரும்பி வரவேண்டும். தினமும் நடந்த களைப்பு, வறுமை மத்தியிலும் அவள் பாடசாலையில் நட்சத்திரமாகப் பிரகாசித்தாள். படிப்பில் மட்டுமின்றி, ஆடல், பாடல், நடிப்பு, பேச்சு, விளையாட்டு முதலியவற்றில் முத்திரை பதித்தாள். ஆனாலுமென்ன? அவை ஒரு வருடத்துக்கு முன்பிருந்து பழங்கதை களாகிவிட்டன. தங்கையாவது படிக்கட்டுமென இவள் படிப்பை நிறுத்திக் கொண்டு, அம்மன் கோயில் தர்மகர்த்தாவிடம் கெஞ்சிமன்றாடி அந்த மடத்தில் சிறுவர் பாடசாலையைத் தொடக்கினாள்.

ஏழை மக்களுக்குச் சேவை என்பதோடு, அப்பிள்ளைகளின் பெற்றோர் சக்திற்கேற்றபடி காய்கறி, அரிசி போன்ற பொருட்களாகவும் வசதியுள்ளோர் சிறிது தொகைப் பணமாகவும் அவளுக்குக் கொடுத்ததனால் குடும்ப ச்சுமைக்குத் தாய்க்குத்தோள் கொடுக்க முடிந்தது.

தங்கள் பிள்ளைகளின் பழக்க வழக்கத்தையும் எழுத்தறிவையும் பார்த்துச் சிறிது காலத்திலேயே அவ்வூர் மக்கள் அவள் மீத மதிப்பும் மரியாதையும் கொண்டனர்.

இரத்தத்துடன் சேர்ந்திருந்த அவளின் சேவா உள்ளம் அவளை மேலும் சேவை களுக்குத் தூண்டிக் கொண்டேயிருந்தது.

அவ்வூர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு கூட்டுறவுக்கடை மனேஜர் தான் தலைவர். அவருக்குக் கடைக் கணக்கு எழுதவும் சாமான்கள் நிறுத்துக் கொடுக்கவும் நேரம் சரியாக இருந்தது. செயலாளர் செல்லத்துரையருக்கு இரவு 9மணி வரை சுருட்டுச் சுற்றல்; அதன்களைப்புத்தீரப்பனம் பானம் அருந்திவிட்டுப் படுத்துவிடுவார். ஆண்டு தோறும் உள்ளூராட்சி ஆணையாளர் ஒதுக்கி அனுப்புகிற சில ஆயிரம் ரூபா உதவி மானியத்தை தமது வீடுகளுக்கு முன்னால் உள்ள ஒழுங்கை திருத்தவும், மதகுகள் கட்டவுமெனச் செலவழித்துவிட்டு ஆண்டுக்கொரு கூட்டத்தை நடத்திச் சங்கத்தை நடத்திக் கொண்டிருந்தனர்.

பல ஆண்டுகளுக்கு முன் கட்டிய அந்தச் சங்கத்தின் மண்டபம், வெள்ளை கூட அடிக்கப்படாமல் தூங்குமூஞ்சி மடமாகக் காட்சி அளித்தது. மாடுகள் அந்தச் சுவர்களில் சொறிதேய்க்கும், வேலையில்லாதவர்கள் நடுமண்டபத்தில் கோடுகீறி 'நாயும் புலியும்' விளையாடுவார்கள்.

இம்முறை நடந்த ஆண்டுக் கூட்டத்துக்குச் சில பெண்களும் வந்துவிட்டார்கள். அதனால் நிர்வாகிகள் தேர்வில் தலைவருக்கும் செயலாளருக்கும் சங்கடமாகப் போய்விட்டது. இளைஞர்கள் கூட்டம் கணக்கு வழங்குபற்றியும் கேள்வி கேட்கத் துவங்கி விட்டனர்.

''நிர்வாக சபையில் படிப்பறிவுள்ள ஒருவராவது இருக்க வேண்டும்'' இளைஞர்கள் குரல் எழுப்பினர்.

''மலர் ரீச்சரையும் போடுங்கோ'' பெண்களும் மெல்லக்குரல் எழுப்பினர்.

''பெட்டைப் பிள்ளையைப்

பெரியபதவிக்குப் போட்டால், அயல் ஊரவர்கள் மத்தியில் இந்த ஊர் ஆண்கள் தலைகுனிய வேண்டும்'' தலைவரும் செயலாளரும் மட்டுமல்ல, சராசரி ஆண்களும் ஒத்தூதினர்.

இறுதியில் வேண்டாவெறுப்பாக அவளை உதவிக்காரியதரிசியாகத் தெரிவு செய்து விட்டனர். அது அவளது இதயத்தில் கனன்றுகொண்டிருந்த சமூகசேவைப் பணியின் முதற்படியாக அமைந்தது. தன்னுடன் படித்த சில தோழிகளையும் சேர்த்துக்கொண்டு, பாடசாலை நேரம் தவிர, அக்கிராமத்தின் பிரச்சினைகளை இனங் காண்பதில் செலவிட்டாள்.

''குமரிகளுக்கு வேலையென்ன? திமிர்த்துக் கொண்டு ஊர் சுத்துதுகள்'' சில வயோதிபர்கள் அவர்களை ஆச்சரியத்துடன் பார்த்துப் புறுபுறுத்தனர்.

''இந்தப் பெட்டையளை இலகுவாக வளைச்சுப் போடலாம்'' வேலையற்ற வாலிபர்கள் சிலர் சீழ்க்கை ஒலி எழுப்பியபடி அவர்களைச் சுற்றிச் சுற்றி வந்தனர்.

ஒரு நாள் அவர்களை மறித்து மலர் தெளிவாகச் சொன்னாள். ''எங்கடை கிராமத்தை முன்னேற்றுவதற்கு எவ்வளவோ வேலை கிடக்கு தண்ணீர் இல்லாமல் தோட்டங்கள் வயல்கள் கோடையில் காய்ந்து வறளுது. மழைகாலத்தில் வெள்ளம் வீடுகளுக்குள் பூருது. எல்லா ஊருக்கும் மின்சாரம் வந்திட்டுது. இன்னும் எங்கடை ஊர் இருட்டுக்கை கிடக்கு. விவசாயிகள் தங்களின் விளைச்சல் பொருட்களை விற்பதற்கு எத்தனை மைல்கள் பாரத்தையும் சுமந்து கொண்டு நடந்து வருந்துகிறார்கள். சிறுவர்கள் கூட உச்சிவெயிலில் நாக்கு வற்றும் படி நடந்துபோய்ப் பாடசாலைக்குச் செல்லுகினம். இதைப்பற்றிக் கொஞ்சமாவது யோசிக்காமல் உங்கள் சக்தியை வீணாக்கி எங்களைக் கிண்டல் பண்ணினால் ஊரைக்கூட்டி உங்கள் மானத்தைத் தான் வாங்க வேண்டி வரும்.'' அமைதியாகத் தெளிவாக நிலைமையை விளங்கப்படுத்தி எச்சரித்தாள்.

அவளுடன் சென்ற துணிச்சல்காரி ஒருத்தி இன்னும் ஒரு படிமேலே சென்று விட்டாள்.

''வழிசல் நாய்கள். இனிமேல் பின்தொடர்ந்தால் செருப்பைத் தான் கழற்ற வேண்டி வரும்''



தங்கள் பருப்பு அவர்களிடம் வேகாது என்ற ஞானோதயம் ஏற்பட்டுவிட்டது போல, பிறகு அந்த வாலிபர்கள் அவர்கள் பக்கமே தலைகாட்டுவதில்லை.

அந்தக் கிராமத்தின் விவசாயத்திற்கு கோடையிலும் பலகாலமாகப் பயனளித்து வந்த ''பெரிய பொக்கன் குளம்'' தூர் வாரி அணை கட்டப்படாததால், நீர் தங்கி நிற்காமல் வெடித்துச் செடிகளும் சல்வீனி யாவும் தலைநீட்டிக் கொண்டிருந்தன.

ஊரின் வெள்ளவாய்க்கால்கள் செப்பனிடப்படாததால் மாரி காலத்தில் நீர் அங்குமிங்குமாய் ஓடிக் குளத்தில் தங்காமல் சமுத்திரத்தில் சங்கமித்து விடுகிறது.

மயானத்துக்குச் செல்லும் பாதை நெருஞ்சிச் செடிகளால் மூடிக் குட்டி வனாந்தரமாகக் காட்சியளித்தது.

பிரதேச சபை அங்கத்தவர்களின் சாதிக்காரர்கள் இருப்பதால் அயலூருக்கு அளிக்கப்பட்டு எரியும் மின்வெளிச்சத்தை இவ்வூருக்கும் கொண்டு வர அதிகம் செலவேற்படாது.

அயலூருக்கு ஊடாகச் செல்லும் பஸ் இவ்வூர்ப்பக்கத்தையும் இருதடவைகளாவது எட்டிப்பார்க்கச் செய்தால் மாணவர்கள் விவசாயிகளின் சிரமத்தைத் தீர்க்கலாம்.

அவ்விளம் பெண்கள் கூடியிருந்து இவை பற்றித் தெளிவான திட்டத்தைத் தீட்டினர். கிராமசபை ஊடாகப் பிரதேசச் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர்,

பிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவர், அரச அதிபர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மனுக்களைக் கொடுத்து உதவி பெறலாமென அவள் சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில் தெரிவித்த போது, இப்படியும் வழி இருக்கா எனச் சிலர் வாயைப் பிளந்தனர்!

``இது நடக்கக் கூடிய காரியமா? இவங்களின்ரை கந்தோர்களுக்குப் படி ஏறி இறங்குவது யார்? இவற்றைத் தெளிவாக எழுதி 'டைப்' பண்ணிக் கொடுக்க வேணுமே'', தலைவரும் செயலாளரும் பின்னடித்தார்கள். பாவம்! அவர்கள் பதவியைச் சுமக்கிற ஞானசூனியங்கள்!

நிர்வாகசபைத் தீர்மானங்களை நிறைவேற்றி தனக்குத் தேவையான ஒத்துழைப்பை அளித்தால் தானே முன்னின்று செய்வதாக மலர் ஏற்றுக் கொண்டது அவர்களுக்குப் பெரிய ஆறுதலாயிருந்தது.

அக்கிராமம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தெளிவாகத் தெரிவிக்கும் மனுக்கள் உரிய இடங்களுக்குக் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாகச் சென்றன.

``உங்கள் மனுக்கிடைத்தது. கவனிக்கப்படும்'' என்ற வழமையான மறுமொழி கிடைத்து ஆறுமாசங்களாகியும் எவருமே அந்தப்பக்கம் எட்டிக் கூடப் பார்க்கவில்லை.

``இத்தனை காலமாக நிர்வாகத்தில் இருக்கிறம். ஒண்டும் நடக்காது எண்டு எங்களுக்குத் தெரிஞ்சுதானே பேசாமல் இருந்தனாங்கள். பெரிசா வெட்டிக் கிழிக்கப்போறன் என்டு இந்தக் குமரி என்ன ஆட்டம் போட்டுது'' நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கேலியும் நையாண்டியுமாகக் கைகொட்டிக் கதைக்கத் தொடங்கிவிட்டனர்.

மலர் மனம் தளரவில்லை.

அவளுடைய நண்பிகளும் முற்போக்கு எண்ணங்கொண்ட சில இளைஞர்களுமாகச் சேர்ந்து அம்மன்கோயில் வீதியில் கிராம மக்களைத் திரட்டி பெரிய பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்கள்.

மலரின் நேர்மையிலும், திறமையிலும் ஆற்றலிலும் நம்பிக்கையும் மரியாதையும் காட்டிய மக்கள் அவளின் ஏற்பாடுகளுக்குப் பின்னணயில் துணை நின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர், பிரதேச சபைத் தலைவர், அரசாங்க அதிபர், மின்சார வாரியத் தலைவர், உள்ளூராட்சி ஆணையாளர் முதலியோரிடம் நேரில் சென்று அழைத்து அவர்களின் ஒப்புதல்களையும் பெற்றனர்.

பொதுக்கூட்டதில் பங்கேற்கத் தமது ஊருக்கு விஜயஞ் செய்த இப்பிரமுகர்களைப் பார்த்து, கையும் காலும் பதற, இவர்களை வரவேற்க பூமாலையும் கையுமாக, வெள்ளை வேட்டி சட்டையோடு பல்லிளித்த படி சங்கத் தலைவரும் செயலாளரும் நின்றனர்.

தலைவர் வேர்க்க விறுவிறுக்கத் திக்கித்திணறிச் சில வார்த்தைகளைத் தப்பும்தவறுமாகச் சொல்லிவிட்டு உட்கார்ந்து விட்டார். செயலாளருக்கு மேடையேறப் பயமும் கூச்சமும் அனுபவமின்மையுமாக இருந்ததால் உதவிச் செயலாளர் மலரை வரவேற்புரை கூற மேடைக்கு அனுப்பி விட்டார்.

தனது வரவேற்புரையில் மலர் தமது கிராமத்தின் பிரச்சினைகள் ஒவ்வொன்றையும் தன்பேச்சுச் சாதூரியத்தால் தெளிவாக விளக்கி அழுத்திச் சுட்டிக் காட்டியபோது அங்கு திரண்டிருந்த சுமார் மூவாயிரம் கிராமவாசிகளும் ஆமோதித்துப் பெருங்குரல் எழுப்பினர்.

கனகச்சிதமாகத் தன் உரையை முடித்து, மேடையை விட்டுக் கீழிறங்கவும், ``எங்கடை மலர் கெட்டிக்காரி'' எனப்பெண்கள் கரகோஷம் செய்து வரவேற்றனர்.

அதிகாரிகள் தமது பேச்சுக்களில் இப்பிரச்சினைகளை இதுவரை எவரும் தமது நிர்வாகத்தின் கவனத்துக் கொண்டு வரவில்லை யெனவும் இப்பொழுது இதைச் செய்தமைக்காக மலரைப் பாராட்டி, இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விரைவில் உரிய நடவடிஎக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர், பிரதேச சபைத் தலைவரை அர்த்தத்துடன் பார்த்துக் கண் வெட்டினார்.

``இவளை எமது கட்சியில் சேர்த்துவிடு. இக்கிராமத்தில் மூவாயிரம் வாக்குகள் எமக்குக் கிடைக்கும்'' என்ற அர்த்தத்தைப் புரிந்து கொண்ட பிரதேசசபைத் தலைவர் அவள் மீது அளவற்ற புகழ்மாலைகளைச் சூட்டிக் குளிரச் செய்தார்.

நாட்கள் நகர, காரியங்கள் படிப்படியாக நடந்தன.

வாய்க்கால்களுக்கு அணைகள் கட்டப்பட்டன.

குளத்தைத் தூர் வாரி ஆழமாக்கிச் செப்பனிட்டு.......... பாதைகளுக்குத் தாரிடப்பட்டு.......

மயானப் பாதையைத் திருத்திக் கிறவல் றோட்டாக்கி..... அடுத்த ஆண்டின் தனது பண்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மின்சாரத்துக்கு நிதி ஒதுக்கித் தருவதாக உறுதி அளித்து எம்.பி. அவசரமாகக் கடிதம் எழுதியனுப்பினார்.

நான்கு மாசங்கள் ஓடி விட்டன.

விவசாயிகளும் பாடசாலை மாணவர்களும் காலையிலும் மாலையிலும் அயலிலுள்ள சிறிய நகரத்துக்குச்

கவிதை

## ஒரு
## கணவனின்
## கண்ணோட்டத்தில்..........

காலைமுதல் மாலைவரை
கவனமுடன் பணிசெய்து
வேலைத்தலம் விட்டு - அந்த
வசுவுக்குள் நெரிபட்டு
வியர்வை வழிய வீட்டு(க்கு)ள்
வந்தடைந்து களைப்புடனே
அயர்ந்திருக்க 'அவன்' கண்டு
அவளிடத்தில் சொல்லுகிறான் :-

''அரசுப் பணிமனையில்
ஆயிரந்தான் அலுவல்கள்
சிறப்புடனே செய்தாலும்
'பிரமோஷன்' பலவும் நீ
அடைந்தாலும் பயனில்லை ; - என்
''ஆட்சி'' க்குக் கீழ்ப்பட்டு
அடங்கிப்போய் இருந்தாற்றான்
''அருமைத்தலைவி'' என்பேன்!
எத்தனைதான் பட்டங்கள்
எடுத்தாலும் புகழ்பெருகி
பத்திரிகைகளில் பெயர்தான்
பிரசுரிக்கப்பட்டாலும் - என் தரும
பத்தினியே நீயுந்தன்
புத்தியிலே பதித்திடடி - நன்கு
கத்தரிக்காய் குழம்புவைக்கக்
கற்றுக்கொள் உய்வடைவாய்!''

'வர்தா'
பேராதனைப் பல்கலைக்கழகம்

சுமைகளைச் சுமந்தபடி நடந்த படி இருந்தனர். போக்குவரத்துச்சபை மௌனமாக இருந்தது.

அவளால் மௌனமாக இருக்க முடியவில்லை. தனது நண்பர்களையும் சேர்த்துக் கொண்டு திட்டம் தீட்டினாள். அதன்படி ஓய்வொழிச்சலின்றிக் கிராமத்தின் ஒவ்வொரு வீட்டுக்கும் தனது திட்டத்தை விளக்கி மக்களுக்குத் தைரியமூட்டினாள்.

அடுத்த சில நாட்களில் ஒரு தினம் காலை அவர்கள் எல்லோரும் தமது வேலைகளை விட்டுவிட்டு அருகிலுள்ள நகரத்துக்கு பஸ் செல்லும் பாதைக்கு குறுக்கே வரிசையாக அமர்ந்து கொண்டனர்.

''எமது கிராமத்துக்கு பஸ் சேவை தேவை'' என்ற பதாதைகள், கொடிகள், கோஷங்களுடன் மறியல் போராட்டம் நடத்தினர். எந்த வாகனமும் அசைய முடியாமல் தடுத்துவிட்டனர்.

இதனைக் கேள்வியுற்றுப் பிரதேசசபைத் தலைவரும் போக்குவரத்து அதிகாரிகளும் சில மணி நேரத்தில் அங்கு ஓடிவந்தனர்.

''இவளுடைய சொல்லுக்கு இவ்வளவு செல்வாக்கா?'' பிரதேச தலைவர் பிரமித்துப் போனார்.

''இன்னும் மூன்று மாசத்தில் பிரதேச சபை தேர்தல் வரப்போகுது. அக்கிராமத்துக்கு பஸ்விட ஏதாவது வழி உடனே செய்யுங்கள். அல்லது எங்களின் கட்சிக்கு வோட்டுக் கிடைக்காது. எம்.பி.யரும் ரெலிபோன் பண்ணிச்சொன்னவர்''. போக்குவரத்துச்சபை அதிகாரியின் காதில் கெஞ்சினார்.

மலரையும் மற்றும் சிலரையும் அழைத்துச் சமாதானம் பேசினர். அடுத்தவாரத்திலிருந்து பஸ் சேவையை அக்கிராமத்துக்கு அளிப்பதாக உறுதி அளித்தனர்.

''எங்கடை மலருக்கு ஜே'' எனக் கொடிகளை உயர்த்திக் கோஷித்தபடி கிராமமக்கள் கலைந்து சென்றனர்.

''பிள்ளை மலர் உங்களோடு தனியக் கொஞ்சம் கதைக்க வேணும்' பிரதேச சபைத்தலைவரின் வேண்டுகோளை ஏற்று அவரைச் சந்தித்தாள்.

''பிள்ளை! நீர் இந்தக் கிராமத்துக்கு இன்னும் பல அபிவிருத்திப் பணிகளை செய்யலாம். எம்.பியும் சொன்னவர். உமக்கு நல்ல எதிர்காலம் இருக்கு. எங்கள் கட்சியில் சேர்ந்துவிடும். இந்தாரும் விண்ணப்பம் மறுக்காமல் கையொப்பமிட்டுத் தாருங்கோ''

கிராமங்களுக்குப் பல நன்மைகளைப் புரியலாம் எனப் பல எதிர்ப்பார்ப்புகளுடன் அந்த விண்ணப்பத்தில் ஒப்பமிட்டுக் கொடுத்தாள் மலர்.

அடுத்துச் சில மாசங்களில் நடைபெற்ற பிரதேச சபைத்தேர்தலில் அவள் அக்கட்சியின்

பிரபல பிரச்சாரப் பீரங்கியாக விளங்கினாள். அந்த ஊரில் மட்டுமல்ல. அயலூர்களிலும் அவளின் உரைகள் இடம் பெற்ற போது சனம் திரண்டு வந்தது. கட்சிக்குப் பேராதரவு சேர்ந்தது. அப்பிரதேச சபைத் தேர்தலில் அக்கட்சி 80% வீத ஆசனங்களைக் கைப்பற்றியது.

''இந்தப்பிள்ளையின் செயல் ஆற்றலுக்கும் தெளிவான பேச்சுக்கும் இவ பாளிமேந்துக்கு அனுப்பப்படவேண்டியவ. 'அந்த ஊரில் மட்டுமல்ல அந்தப்பிரதேச மெங்கும் உள்ள மக்கள் அடுத்த பாராளுமன்றத் தேர்தலுக்கு மலரையே வேட்பாளராக நிறுத்த வேண்டுமென ஒரு மனதாகத் தீர்மானித்து விட்டனர். பிரதேச சபைத்தலைவரும் கொடுப்புக்குள் சிரித்தபடி 'ஓமோம்! கட்சி மேலிடத்துக்குச் சிபார்சு செய்கிறேன்' என்று தலையசைத்தார்.

*******

சில மாசங்களில் எதிர்பாராத அந்தச் சம்பவம் நடந்துவிட்டது.

மாரடைப்பால் அவர்களின் எம்.பி. இறந்து விட்டார். அப்பிரதேசமே சோகத்தில் ஆழ்ந்துவிட்ட போதிலும் அந்த வெற்றிடத்துக்குத் தம்மை நியமிக்குமாறு பலர் பணத்தை இறைத்து பலப்பரீட்சையில் ஈடுபட்டனர்.

மலரின் பெயரையும் ஆயிரக்கணக் கானோர் கையொப்பமிட்டுப் பிரேரித்துக் கட்சியின் தலைமைப்பீடத்துக் அனுப்பினர்.

மலரின் பெயர் தலைமைக் குழுவின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது

''மலரா? சே! அரசியலுக்கு வரக்கூடிய, பாராளுமன்றக் கதிரையில் உட்காரக் கூடிய படிப்பறிவுண்டா அவளுக்கு?

''ஏழை வீட்டுப் பிள்ளை, க.பொ.சாதாரண தரத்துக்கு மேலை படிக்க வசதியல்லாமல் பள்ளியை விட்டு விலகியவள். இவளுக்குப் பாராளுமன்றப் பதவியா?''

''ஆம்பிளையளுக்குச் சமமா, இந்தப் பொம்பிளை என்னத்தைப் பேசுவாள்?

''பெட்டைக்கோழி சேவலுக்குச் சமமே! உதெப்பிடி பாராளுமன்றத்திலை கொக்கரிக்குமே?

''மந்திரிமார் வெளிநாட்டுக் காரன்களெல்லாம் வாறபோற இடத்தில் மாத்திக்கட்டச் சேலையில்லாத மலர் மரியாதை கெடுறதே''

கருத்துக்கள், எண்ணங்கள் அபிப்பிரா யங்கள் 'ஜெட்' வேகத்தில் பறந்தன.

மக்களுக்கென இதுவரை எதுவும் செய்யாத ஆனால் கட்சிக்குப் பெருந்தொகையை வாரிவழங்கிய அப்பிரதேசத்தைச் சேர்ந்த பெரிய வியாபாரப்புள்ளியும் மக்களால் இதுவரை அறியப்படாதவருமான மறைந்த எம்.பி.யின் மைத்துனரைப் புதிய எம்.பி.யாகக் கட்சித் தலைமைபீடம் அறிவித்து விட்டது.

''சீ! கேடு கெட்ட அரசியல். சேவை செய்பவர்களுக்கு அதில் இடமில்லை. செயலாற்றல் கொண்டவர்களுக்கு இடமில்லை. பணக்காரர் பதவிகளைப் பணம் கொடுத்து வாங்கிப் போடுகிறான்கள். தேர்தலில் இக்கட்சிக்குப் பாடம் படிப்பிக்கிறோம்'' மக்கள் தமக்குள் குமுறிக் கொண்டனர்.

''கொடி பிடிக்கவும், ஊர்வலத்துக்கு ஆட்சேர்க்கவும் தான் அரசியல் கட்சிகளுக்குப் பெண்கள் தேவையோ? பார்லிமேந்துக்கு அவர்கள் போனால் தூடக்கு வந்துவிடுமோ?'' பெண்கள் ஆத்திரத்தில் கறுவிக் கொண்டார்கள்.

மலர் சலனம் அடையவில்லை.

மக்களிடம் ஏற்பட்ட விழிப்புணர்வும், தனது கிராமத்துக்குத்தான் முன்னின்று செயற்பட்டதன் பயனாகக் கிடைத்த நன்மைகளும் அவள் மனதுக்கு ஆறுதல் அளித்தன.

*******

*''ஓடி விளையாடு பாப்பா! நீ*
*ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!*
*பாதகஞ் செய்பவரை கண்டால்*
*மோதி மிதித்துவிடு பாப்பா - முகத்தில்*
*உமிழ்ந்துவிடு பாப்பா''*

அவ்வூர் அம்மன் கோவில் மடத்தில் நடைபெற்று வரும் சிறுவர் பாடசாலையில் பாரதியின் இப்பாடல் ஓங்கிய குரலில் ஒலித்துக் கொண்டிருந்தது●

# பெண்ணின் குரல்

ஜூன் 2002 இதழ் 25 ISSN 1391- 0914 விலை 20/=

## சமனற்ற சட்டங்கள்

பெண்ணாகப் பிறந்தால்
அடிமை,
ஆணாகப் பிறந்தால்
அதிகாரம்.
பொய்யான சட்டம்
என்றும்
ஆணை உயர்த்தியே
வைக்கும் ;
பெண்ணைத் தாழ்த்தியே
கூறும்.
சட்டங்களை இயற்றியது
ஆண்களே,
அதனால் சட்டங்கள் சார்பானது
ஆணினத்துக்கே.
சமனற்ற சட்டத்தைக்
கிழித்தெறிந்தால்,
விடியலன்றோ
பெண்ணினத்துக்கு?

- யோகேஸ்வரி கிருஷ்ணன்
(குறிஞ்சிக்குயில்கள்)